உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௭] பிரமாதி ௵ தை௴ [பகுதி-௩.

Vol. 37. January—February 1940 No. 3.

## பரதாழ்வான்வைபவம்.

[௩0-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பரதாழ்வானுடைய நாமகரணவைபவம் கூறிய மஹாகவி கம்பநாடர், அவன் கைக்கொண்டொழுகிய கடவுள்வழிபாடான இராமனடித்தொழும்பே மெய்ந்நெறியென்றும், அது எளிதின் அடைதற்பாலதாயும் பிறவிப்பிணிதீர்த்தற்கு உபாயமாயும் அதுதானே இன்புறுபயனாயும் வேதப்பிரமாணஸித்தமாயும் உள்ளதென்றும், அவன் அம்மெய்ந்நெறியை உலகத்தாரும் அறிந்தொழுகி உய்யுமாறு தான் ஒழுகிக்காட்டி, அவ் அறத்தை நிலைநிறுவுதற்பொருட்டு அவதரித்த மஹாபுருஷன் என்றும் குறிப்பால் தோன்றும்படி, அம்மெய்ந்நெறியின் மகிமைகளையும், பரதாழ்வான் பெருமையையும் தம்முடைய பேச்சாலே பேசினார்;

புகழ்பொருளைச் சிறப்பிக்கும் புலமையுடைய தம் பேச்சாலே பேசியதுகொண்டே உலகத்தார் அதனை நம்புதல் அரிதென்றெண்ணி, நம்புதற்குரிய தக்கோரின் சான்றுகொண்டும் வலியுறுத்தவேண்டி, அவ்வறநெறியொழுக்கிற்குச் சான்றாவாரைத் தேடினார்;

*

'இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன் றும் முற்ற அறிதலால்—தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்'

என்று சொல்லுதற்குரியராய், முற்றத்துறந்து பெருந்தவம்புரிந்து முழுதுமுணர்ந்த பெரியாராயுள்ள விசுவாமித்திரமஹாமுனிவரே இம்மெய்ந்நெறியின் பெருமையினையும் பரதாழ்வான் மகிமையினையும் உள்ளபடிசொல்லவல்ல சான்றுவாரென்று கருதினர்;

அவ்வாறு கருதியவர், சான்றுவாரேயன்றிக் கேட்பவர்களும் அறநெறியறிந்தவராயும் தர்மாநுஷ்டாநபரராயும் இருக்கவேண்டுமென்று எண்ணி,

1 'கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:'

என்று அறம் நிலைநிறுவிய கண்ணபிரானால் கொண்டாடப்பட்ட தர்மாநுஷ்டாநபரரான ஜ்ஞாநஜநககுலத்தில் பிறந்து எல்லா அறங்களையும் குலதர்மமாகவே கொண்டொழுகும் மிதிலாதிபதியான ஜநகமஹாராஜனையும்,

'ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி'

என்று சொல்லும்படி, தம் தவமகிமையால் சாபாநுக்ரஹங்கள் இரண்டற்கும் சதமகனுயுள்ள தேவர்கோமானையே இலக்காக்கிக்காட்டிய கௌதமருக்குப் புத்திரரான சதாநந்தர் முதலான அறநெறியறிந்தோர் குழுமிய ஜநகமஹாராஜனது திருவோலக்கத்துள்ளாரையும் இந்தப் பரமதர்மத்தைக் கேட்கத்தக்கவரென்றுகொண்டார்;

---

1 இதன்பொருள்: 'தர்மாநுஷ்டாநத்தினாலேயே ஜ்ஞாநஜநகன் முதலியோர் வீடுபேறடைந்தார்கள்' என்பதாம்.

அவ்வாறுகொண்டவர், விசுவாமித்திரமஹாமுனிவர், வேள்வி முடித்து, ராமலக்ஷ்மணர்களுடன் மிதிலாநகரத்தில் ஜநகராஜ புவநம் சென்றிருந்தபொழுது ஜநகமஹாராஜன் ராமலக்ஷ்மணர்களைச் சுட்டி, 'இவர் யார்?' என்று முனிவரை வினவ, முனிவர், அவர்களுடைய வைபவம் சொல்லிவருமிடையே, பரதாழ்வான் வைபவத்தையும் நுழைத்துக்கொண்டு, அவன் ஒழுகிவரும் இம்மெய்ந்நெறியொழுக்கின் பெருமையையும் அவன் மகிமையையும் அம்மஹாமுனிவர்வாக்காலே பின்வரும் செய்யுளால் நிரூபிக்கிறார்.

அச்செய்யுள்,

'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்'

என்பது.

இங்கு, விசுவாமித்திர மஹாமுனிவர், வேதாதி சாஸ்த்ரங்களாலும், தம் அநுஷ்டாந அநுபவத்தாலும் அறிந்துள்ளபடியே தர்மங்களை, 1 நீதி என்றும், 2 பெருநீதி என்றும், 3 தள்ளரிய பெருநீதி என்றும் மூன்றுபடியாகப் பகுத்துக்கொண்டு, அவற்றுள், பரதன் அநுஷ்டிக்கும் நீதியைத் தள்ளரிய பெருநீதி என்கிறார்.

அரசனுணையால் நிகழும் உலகியலொழுக்கம் நீதியெனப்படுதல்போல, பகவதாஜ்ஞையால் நிகழும் அறநிலையொழுக்கம் இங்கு நீதியெனப்பட்டது.

நீதி எனினும், நெறி எனினும், இறைவனுணை எனினும், தர்மம் எனினும் ஒக்கும்.

இவர் (விசுவாமித்திரர்), தர்மம் மூன்றுபடிப்பட்டிருக்கும் என்று, தாம் அநுஷ்டித்தறிந்தபடி எங்ஙனம்? என்னில், இவர் அரசர்குலத்திற்பிறந்து, உலகுபுறந்தரலான ஸாமாநியதர்மத்தை

அநுஷ்டித்துக்கொண்டு காட்டில் வேட்டைமேற்சென்று, இளைப் படைந்து, வசிஷ்டாசிரமம் அடைய, வசிஷ்டபகவான், தம் தவப் பெரும்பேற்றால், காமதேநுவைக்கொண்டு இவர்க்கும் இவர் பரி ஜனங்களுக்கும் அமிர்தமயமான அந்ந பாநீயங்களால் விருந்துண வளித்து ஆதித்தியம் செய்ததையும், அத்தகைய காமதேநுவை இவர் தமக்கு உரியதாக்கிக்கொள்ளக்கருதி, அவருடன் மாறுபட்ட பொழுது, அவரது தவமஹிமையால் இவர் தோல்வியுற்றதையும் நினைந்து, 'இவ் அற்பமான அரசர்வலிமையைச் சுடு' (யிக் பலம் க்ஷத்ரியபலம்') என்று சொல்லி வெறுத்துத் தள்ளிவிட்டு, 'அந்தணர்வல்லமையே வல்லமை' (ப்ரஹ்மதேஜோபலம்பலம்) என்று தவவலிமையை நன்குமதித்து, வஸிஷ்டபகவான்போலே தாமும் பிரமருஷியாகவேண்டி அருந்தவம் பலபுரிந்து பெரும்பயன் அடைந்தமையால், அத்தவவொழுக்கத்தைப் பெருநீதி என்று கொண்டொழுகினர்.

அப்பெருநீதியான தவமுயற்சியால், பாவநாசம் உண்டாகிய பின்பு, தன்னைத் தன்வயத்தன் என்று எண்ணும் பொய்யுணர்வு நீங்கி, ஈசன்வயத்தன் (— பகவத்பரதந்த்ரன்) என்னும் மெய் யுணர்வு தோன்றலும், தாம் பெருநீதி என்றுகொண்டொழுகிய தவவொழுக்கத்தை நினைந்தார்; அத் தவவொழுக்கம், "காயிலை தின்றும் கானில் உறைந்தும்.....தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரி" தலால் உண்டாகும் துன்பமுடையதாயும், தன்னலம் கருதிய தாயும், பொய்யுணர்வான அகங்கார மமகாரங்களுடன்கூடிய சுதந்திரபுத்தியால் செய்யப்படுவதாயும் இருத்தலால், அதனை, துன்பத்துக்கு இருப்பிடமான அகங்கார மமகாரங்களொழிந்து பகவத்பரதந்த்ரமாகவேயிருக்கும் தன் ஸ்வரூபத்தோடு சேராதென்று தள்ளிவிட்டார்; அதனால் அத்தவவொழுக்கமும், இவரால் தள்ளப்பட்ட பெருநீதியாயிற்று.

பின்பு,

'பெண்ணில் நோக்கும் சுவையிற் பிறர்பிறர்க்கு
எண்ணி நோக்கி இயம்பரும் இன்பத்தைப்
பண்ணில் நோக்கும் பராவமுதைப் பசுங்
கண்ணில் நோக்கினர் உள்ளங் களிக்கின்றார்'

என்கிறபடியே, பெண்ணில் நோக்கும் சுவையினின்றும் நூற்றான் உறழ்ந்து அடுக்கடுக்காய் எண்ணியும் அளவிடமுடியாத இன்பமயமாயும், கண்ணாற் கண்டவாறே உள்ளங் களிக்கச்செய்வதாயும் உள்ள பகவத்ஸேவையை வஸிஷ்டபகவான் முதலான முனிவர்கள் அநுபவித்தாற்போலே தாமும் அநுபவித்து ஆநந்தமடையக்கருதி, பெருமாளும் பிராட்டியுமான திவ்யதம்பதிகளுடைய திருக்கல்யாண மஹோத்ஸவஸேவார்த்தியாய்ச் சென்றிருப்பவராதலால், இத்தகைய பகவத்ஸேவாரூபமான மெய்ந்நெறி (கடவுள்வழிபாடு) முன்பு தான் அநுஷ்டித்து, அவற்றின் தோஷம் கண்டு தள்ளிய நீதியும், பெருநீதியும் போலன்றி, குற்றமற்ற பலவகை நலங்களும் பயப்பதாயிருத்தல்பற்றி இதனை, தள்ளரிய பெருநீதி என்கிறார்.

அன்றியும், இந்த ஸேவையைக்கொள்ளுமவனான எம்பிரானும் சத்தியவாக்கியாய், ஒருவிதத்தாலும் இவனைத் தள்ளுகிறதில்லை' ('ந த்யஜேயம் கயஞ்சந') என்று முறிச்சீட்டெழுதிவைக்குமவனாதலால், அவனாலும் தள்ளுதலியலாதென்பார், தள்ளரியநீதி என்கிறார் என்னவுமாம்.

அன்றியும், இதனுடைய இன்பமிகுதியை நோக்கினாலும் ஸேவைசெய்வோர் போதுமென்று திருப்திபடைந்து தள்ளுதற்கும் இயலாதென்பார், தள்ளரியநீதியென்கிறார் என்னவுமாம்.

அன்றியும், உலகத்தில் ஒரு சிற்றரசனிட்ட கட்டளையான நீதியும், தள்ளரியதாயிருக்கும்போது, ஸர்வலோகநாயகன் இட்ட கட்டளையான (பகவதாஜ்ஞா கைங்கர்யரூபமான) இப்பரமதர்மத்தை ஒருவாற்றானும் தள்ளுதல் அரிதென்னுங் கருத்தால் தள்ளரிய நீதி என்கிறார்: என்னவுமாம்.

இனி, மற்றுள்ள நீதிகளெல்லாம் சிறுபயனளித்தலால் சிறு நீதிகளாய், இது வீடுபேறாகிய பெரும்பயனளித்தலால் இதனுள் அடங்கும் என்பார் இதனைப் பெருநீதி என்றார் என்க.

இங்ஙனம் ஸேவ்யனும் ஸேவகனுமாகிய இருவராலும் தள்ள வொண்ணாதாயிருக்கும்படியையும், இதன் எய்தற்கெளிமை இனிமை முதலிய குணநயங்களையும் ஒரு திருஷ்டாந்தமுகத்தாலே விரித்துக்காட்டுகிறார் தனியாறு என்று தொடங்கி.

தனிமையாவது: ஒப்புயர்வற்றதின்மை. யாறு—இடையறாத வெள்ளப்பெருக்குடையது. இடையறாத வெள்ளப்பெருக்குடைய யாறெல்லாம் ஒன்றற்கொன்று ஒப்பும் உயர்வும் உடையனவாய் ஓரளவுபட்டிருக்கும்; அவற்றின் வேறாயுள்ள இவ் யாறு, விரஜாநதி போல ஆதியும் அந்தமுமின்றி அம்ருதப்ரவாஹமாயிருக்குமென்பார், தனியாறென்றார்.

ஸம்சாரதாபமுற்றோர்க்கெல்லாம் விடாய்தீரும்படி திளைத்தற்கிடமாயும், 'சேடியார் நோய்கள்கெடப் படிந்து குடைந்தாடி—அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே' (திருவாய். 2. 4. 9.) என்று அதனை அநுபவிப்பார் சொல்லும்படியிருப்பதால் இந்நெறியொழுக்கு அம்ருதப்ரவாஹம் என்னலாம்படியிருக்குமென்பார், தனியாறு என்கிறார். இது, அபூத உவமைபற்றிவந்த உருவகம்.

இப்படியான இதன் நன்மையையும் இன்புடைமையையும் நோக்கினார்க்கு இது தள்ளரிய பேரியாறென்னத் தட்டில்லை.

இப்படியாக, பகவத்ஸேவையின் வைபவத்தை, விசுவாமித்திர மஹாமுனிவர் தம் அநுபவங்கொண்டு சொல்லி, இந்நெறியில் இழிவார்க்கு இதன் அடைதற்கெளிமை சொல்லுகிறார் புக என்று.

இதனால், பிறநெறிகளெல்லாம் ஒழுகுவார் தாமே வருந்தியடையவேண்டியனவாயிருக்கும்; இந்நெறி, அங்ஙனமன்றி அது

தானே ஒழுகுவாரைத் தேடிவந்தடையாநிற்கும் எண்மையுடையது என்பதாம். இதற்கு 'மலர்மிசையேகினான்' என்பதும் சான்றாயிற்று.

இனி, இந்நெறியில் பரதாழ்வானுக்குள்ள வேட்கைமிகுதியைச்சொல்லுகிறார், மண்டும் என்று.

மண்டுதலாவது: தாஹாதுரனாயிருப்பான், மிக்க நீர்வேட்கையோடு பருகுதலாம். இதனால், இந்நெறியில் அவனுக்குள்ள இன்பமிகுதியும் வேட்கைமிகுதியும் இன்றியமையாமையும் கூறினாராயிற்று.

புக, மண்டும் என இருதலையினும் உள்ள வினைச்சொற்களின் நிகழ்காலக்குறிப்பினால்,இவனுக்கு அந்நெறியொழுக்கமும், அதனை இவன் நுகரும் நுகர்ச்சியும் எக்காலமும் இடையறாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும் என்பதும், அதுவே போகரூபமாயுமிருக்குமென்பதும் குறிப்பாயிற்று.

இதனால், அத் தள்ளரிய பெருநீதித் தனியாறு இவனிடம் புகுதலும், இவன் அதனை மண்டி அநுபவித்தலும் சாதநாந்தர ஸித்தமன்று; ஸ்வரூபஸித்தமென்பதும் பெறப்பட்டது.

அத் தள்ளரிய பெருநீதித் தனியாறு இவனிடம் வந்து புகுந்துகொண்டேயிருப்பதற்கும், இவன் அதனை மண்டிப் பருகிக் கொண்டேயிருப்பதற்கும் இவனுக்குள்ள தகுதி என்னென்னில், அதனையும் ஒரு திருஷ்டாந்தமுகத்தால் நிரூபிக்கிறார்: 'பள்ளமெனும் தகையான்' என்று.

இங்கு யாறென்னும் எதிர்நிலைப்பொருளின் அடையாகிய தனிமை பெருமைகளை, அவ் யாற்றின் எதிர்நிலைப்பொருளாகிய பள்ளத்துடனும் கூட்டி, தனிப்பெரும்பள்ளம்: எனக் கொள்க. இதனால் இவன் தள்ளரிய தனிப்பெரும்பள்ளமாயிருத்தலே இத்தனிப்பேரியாறுபுகுதற்கும், அதனை இவன் மண்டுதற்கும் உரிய தகுதியாயிற்று. தனிப்பெரும்பள்ளம் என்பது மிகப்பெரிய ஆழமாய்,

அவ்வாழமுடைமையால் ஆழி என்னும் தனிப்பெருங்கடலாய், அக்கடல்போலுள்ளான் பாதன்: என்பதாம்.

'தனிப்பெருங்கடல்' என்பது, தனியாறென்றதுபோல அபூதவுவமையடியாகவந்த உருவகமாதலால், உலகத்திலுள்ள உவர்ப்பெருங்கடல்போல்பவனல்லன்; இவனும் ஒரு அம்ருதசாகரமாயுள்ளான்: என்பது பொருளாகக்கொள்க. இது அநுபாவ்யத்வஸூசகம்.

இதனுல், யாறு கடலிற்சென்று புகுந்துகொண்டேயிருப்பதும், கடல் அதனை மண்டிப் பருகிக்கொண்டேயிருப்பதும் இயல்பாயிருப்பதுபோலே, இந்நெறி பாதனையடைந்துகொண்டிருப்பதும், அதனை இவன் நுகர்ந்துகொண்டிருப்பதும் இயல்பாம்: என்றுராயிற்று.

தனிப்பேரியாறு கடலைத்தள்ளிச்செல்லாமலும், கடல் யாற்றைத்தள்ளிநில்லாமலும் இருப்பதுபோல, இருதலையாலும் தள்ளுதலின்மையால்,யாறும் தள்ளரிய தனிப்பேரியாறு எனப்பட்டது; பாதனும் தள்ளரிய தனிப்பெரும்பள்ளமெனுந்தகையான்: எனப்பட்டான்; என்க.

பள்ளம் எனினும், நீசம் எனினும், தாழ்வு எனினும் ஒக்கும். தகை எனினும் தன்மை எனினும் ஒக்கும்.

இதனுல், 'பள்ளமெனும் தகையான்' என்பதற்கு, தாழ்தற்றன்மையுடையான் பாதன்: என்பது பொருளாயிற்று.

ஆகவே ஸ்வதந்த்ரனுயுள்ள பகவானுக்கு,பாதந்த்ரனுன இவன் தாழ்ந்தவனுயிருக்கை இவனுக்கு ஸ்வரூபதர்மமாயிற்று.

அதாவது: அவனைத் தலைவனுக நினைக்கும்போது இவன் அடியனுகவும், அவனை முதல்வனுக நினைக்கும்போது இவன் கடையனுகவும், அவனை ஈசனுக நினைக்கும்போது இவன் நீசனுகவும் அவனை வழிபடுமிடத்துத் தன்னை நினைத்திருப்பன்: என்பதாயிற்று.

இது பகவத்ஸந்நிதியிலே தன்னுடைய நைச்சியத்தை (நீசத் தன்மையை) அநுசந்திக்கவேண்டும் என்னும் வைஷ்ணவ ஸம்ப்ர தாய ரஹஸ்யார்த்தத்தை வெளியிட்டவாறாயிற்று. இக்கருத்தாலே, 'நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் - பாசம்வைத்த பரஞ் சுடர்ச்சோதிக்கே' (திருவாய்மொழி. 3. 3. 4.) என்று ஆழ்வாரும் பகவத்ஸந்நிதியில் அநுசந்தித்தார்.

இவற்றால், பகவத் பாதந்த்ரமான தாழ்வுடைமைவேண்டாது, அகங்காரம் மமகாரம் தன்வயமுடைமை: என்னும் இவற்றால் நெஞ்சு மேடுபட்டிருக்குமிடத்தில் இத்'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமாட்டாதென்பதும், அங்ஙனம் நெஞ்சு மேடுபட்டிருப்பார் இத் தனியாற்றின் ஒரு சிறு துளியும் பருகார் என்பதும் போந்தபொரு ளாயிற்று. இதற்கு உதாரணம் இரணியன் முதலானவர்களிடம் காணலாம்.

இப்படித் தன்வயமின்றிப் பாதந்த்ரனாயிருந்தால், இவனுக்கு ஸ்வதர்மமாயுள்ள ராஜ்யாதிபத்யம்செய்யல் இயலாதே? என்னும் சங்கை உண்டாக, அதனைப் பரிஹரிக்கிறார், 'பரதனேனும் பெய ரானை' என்று.

பரதன் என்பதற்கு ராஜ்யபாரமுடையோன் என்பது பொருள். இவனுக்கு இந்த நாமகரணம் செய்தவர், முக்காலமும் உணர்ந்த முனிவரான வசிஷ்டபகவானாதலால் அவர்வாக்குப் பொய் யாகாதே, பகவத்பாதந்த்ரனாகவே இருந்துகொண்டு பகவந்நிய மனத்தால் ராஜ்யபாரம் மேற்கொண்டொழுகலுங்கூடுமென்று பரி ஹரித்தார் என்க.

இதனால் இந்நெறியொழுகுவார் அவன் இட்ட கட்டளை கொண்டு அண்டாதிபத்தியமும் செய்யக்கடவராயிருப்பர் என்றவா றாயிற்று.

இப்படி, பரதாழ்வானுடைய அநுஷ்டாந வைபவமும் ப்ராபவமும் கேட்டார்க்கு அவன் குணநிசயமும் அறியவிருப்பமுண்டாவது தெரிந்து, அதனையும் அறிந்துகொள்ளும்படி உதாகரித்துக் காட்டுகிறார், 'எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த வள்ளலையே அனையான்' என்று.

குணமென்பது நற்குணங்களுக்கே பெயராயிருக்கச்செய்தே அதனை எள்ளரியகுணமென்றதன் கருத்து, அவற்றையெள்ளுதற்குரியரான மாறுபாடுடையாராலும் எள்ளப்படாதிருத்தல்:* என்பதாம்.

இதனால் இராமகுணங்கள் விரோதபாவமுள்ள விராதன், கபந்தன், வாலி, தாரை, அங்கதன், சூர்ப்பநகை, இராவணன், கும்பகருணன்: இவர்களாலும் துதிக்கப்பெறுதல் கருதியதாயிற்று.

இவ்வாறே பரதன்குணங்களும் இவன்கருத்தொடு மாறுபட்டுநின்ற வசிஷ்டபகவான், குகப்பெருமாள், பரத்துவாஜர், கௌசலை: இவர்களால் துதிக்கப்படுதல் கருதியதாயிற்று.

குணங்களுள் எழிலும் அடங்குமாயினும், இவர் திருக்கல்யாணமஹோத்ஸவஸேவைகருதிவந்தமையால் அதற்கு உறுப்பாகக்கூறும் குறிப்பாலே 'எழிலாலும்' என்கிறார்.

எள்ளரிய என்னும் அடையை எழிலுடனும் கூட்டி, 'எள்ளரிய எழிலாலும்' என்க.

இவ்வெழிலும் விரோதபாவமுடையாராலும், 'வரிவில் வாழ்க்கையர் மன்மதன்மேனியர்' என்று இராமனும், 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' என்று பரதனும் சொல்லப்பட்டமையால் எள்ளப்படாதாயிற்று.

---

* இங்கு, க்ருஷ்ணவதாரகுணங்கள், சிசுபாலாதிகளால் எள்ளப்பட்டமை நினைக்கத்தகும்.

'வள்ளலேயே அனையான்' என்று வண்மையை உடம்பொடு படுத்துக்கூறினமையால், இராமன் பரசுராமனையும் வாலியையும் இராவணனையும் வென்றுகொள்ளும் நாடுகளைத் தனக்கெனக்கொள்ளாது, தன்னையடைந்தார்க்கு உதவுதலேபோல, பரதன்கைகேயி மூலம் தனக்குக்கிடைக்கும் ராஜ்யத்தையும் தனக்கென்றுகொள்ளாது வள்ளலுக்குதவும் வள்ளலாவான்: என்பதை நினைந்து, 'இவ்விருந்த வள்ளலேயே அனையான்' என்கிறார்.

வண்மையும் இங்குச் சொல்லிய குணங்களுளடங்குமாயினும், அது பெருஞ்செல்வமுடைமையை உள்ளடக்கிக்கொண்டு மற்றைக் குணங்களுக்கெல்லாம் மேற்பட்டுவிளங்குதலால் அதன் சிறப்பு நோக்கி உடம்பொடுபடுத்து வேறுகூறினார்.

அன்றியும், ஜநகமஹாராஜன் விசுவாமித்திரருடன்வந்திருக்கும் ராமலக்ஷ்மணர்களைச் சுட்டி, 'இவர் யார்' என்று வினவ, விடைவழுவும் மற்றொன்று கூறலும் ஆம்படி, பரதாழ்வானுடைய வைபவத்தைக் கூறிக்கொண்டுவருவது என்? என்னும் சங்கையுண்டாமென்பது உணர்ந்து, அதைப் பரிகரிப்பார், 'இவ்விருந்த வள்ளலேயேயனையான்' என்றார்: என்னவுமாம்.

இதனால், இவனை (இராமனை) நினைக்கும்போதே இவனோடு பரமஸாம்யாபந்நனான பரதன் நினைவும் உடன்வருவதாயிருக்கும்; அதனால் இவன்வேறு அவன்வேறு என்று நினைக்கவொண்ணாதென்பதாம்.

இதன்கருத்து, பகவத்துல்யர்களாகவே பாகவதர்களையும் நினைக்கவேண்டுமென்பதாயிற்று.

ஜநகனால் வினவப்பெற்ற ராமலக்ஷ்மணர்களுக்கிடையே இராமனையடுத்துப் பரதனைச்சொன்னமையாலும், 'இவ்விருந்த வள்ளலேயே அனையான்' என்ற ஒப்புமையாலும், இராமனும் பரதனும் கௌசலையின்மக்கள்போலும்! இங்ஙனம் அடிமையாயிருப்பவனுக்கு வண்மையும் அதற்குரிய செல்வமும் எங்ஙனம் பொருந்தும்?

என்று சங்கையுண்டாதலும் கண்டு அதனைத் தெளிவிக்கவேண்டி, (இவனைக்) 'கேகயர்கோன்மகள் பயந்தாள்' என்கிறார். இதனால் இராமனினும் இவனுக்கு ஏற்றம் காட்டியவாறாயிற்று; அதாவது: கேகயர்கோன், தசரதனுக்குக் கைகேயியிடமுள்ள வேட்கைப் பெருக்கறியும்பொருட்டுப் பெற்றுக்கொண்ட ராஜ்யத்தை மீட்டும் கைகேயியிடம்பிறக்கும் புதல்வனுக்குக் கொடுக்கும்படி சொல்லி யிருப்பதைக் குறிப்பாற் காட்டினார்: என்பதாம். (இது மணவினை முடிக்கும் குறிப்பாயிற்று.)

உலகத்தார்செய்த தவப்பயனாக அளித்தாள் என்பார் 'பயந் தாள்' என்றார்.

இதுகாறும் கூறியவாற்றால், தர்மங்கள் மூன்றுவகையென் றும், அவற்றுள் பகவத்ஸேவையே சிறந்த தர்மமென்றும், அது, செய்தற்கு எளியதாயும் இன்பமுடையதாயும் இயல்பானமைந்த தாயும் உள்ளதென்றும், பகவத்பாரதந்த்ரியபுத்தியுள்ள வர்க்கல்லது. கைகூடாதென்றும், பகவத் தாஸ்யபுத்தியோடுகூடி, அவனிட்டகட்டளையென்றெண்ணிச் செய்யும் அண்டாதிபத்தியம் முதலான ஸமஸ்தமான தர்மங்களும் பகவத்கைங்கர்யம் என்னும் மெய்ந்நெறியாம் என்றும், பாகவதரையும் பகவத்துல்யராகக் கருதவேண்டும் (அதாவது: பகவத்பாரதந்த்ரியம்போலே பாகவத பாரதந்த்ரிய கைங்கர்யமும் விரும்பத்தக்கது) என்றும் பலபடியாக இத் தர்மவிசேஷங்கள் நிரூபிக்கப்பட்டன.

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

# கம்பராமாயண சாரம்.

[௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

74 காக்கலா நும்முன் றன்னை யெனினது[1] கண்ட தில்லை
ஆக்கலா மறத்தை வேறே யென்னினு[2] மாவ தில்லை
தீக்கலாங்[3] கொண்ட[4] தேவர் சிரிக்கலாஞ் செருவி[5] லாவி
போக்கலாம் புகலாம் பின்னை[6] நரகன்றிப் பொருந்திற் றுண்டோ.

கொண்டுகூட்டு: *நும்முன் தன்னைக் காக்கலாமெனின், அது கண்டதில்லை. மறத்தை (அவனினின்று) வேறுக்கலாமெனின் அது(வும்) ஆகுவதில்லை. தீக்கலாம் கொண்ட தேவர் சிரிக்கலாம் போரில், ஆவிபோக்கலாம், பின்னை நரகம் புகலாம். (இஃது) அன்றி (வேறு புகுதற்குப்) பொருந்திற்று உண்டோ? (இல்லை).*

பொருள்: *உன் தமையனைக் காக்கலாமென்றாலோ, அது (-அவனைக் காத்தல்—அவன் மேற்கொண்டுள்ள அதருமத்தைவிட்டுவிடும் வரை எவ்வாறு சாத்தியமென்பது) தெரியவில்லை. அதருமத்தை (அவனாக விடவில்லையானாலும், அதை நாம் அவனைவிட்டுப்)பிரித்து விடலாமென்றாலோ, அதுவும் முடிவதில்லை. (இராக்கதரோடு) கொடிய மாறுபாடுகொண்ட தேவர்கள், (அரக்கர் தோல்வியடைதல் கண்டு) சிரிக்கலாகும் போரிலே (அவர்கள் சிரிப்புநீங்க வீரங் காட்டி) உயிரைப்போக்கலாம்; (உயிர்போன) பின்பு நரகம்புகலாம். (புகுதற்கு, நரகம்) அன்றிப் பொருத்தமானது (வேறே) உண்டோ? (இல்லை).*

*மறம் - அதருமம். தீ கலாம்—கொடிய மாறுபாடு. 'அகன்ற' 'ஆன்ற' என ஆனதுபோலக் 'கலகம்' 'கலாம்' என ஆனதெனலு மாம். 'வடகம்', 'வடாம்' என வழங்குதல் இதனை வலியுறுத்தும். செரு - போர். பொருந்திற்று - பொருந்தியது - பொருத்தமானது.*

"தீக்கெலாம்" என்ற பாடத்தில், 'தீக்கு' திக்கு என்பதன் நீட்டல். "நும்முன்" என்று இராவணனைக் கூறுகின்றான், தான் அவனுறவை யொழித்தமை தோன்ற" வை. மு. கோ.

பாடபேதம்: 1 என்னினும். 2 எனினு மாங்கு. 3 தீக்கெலாம், தீர்க்கலாம். 4 கொண்டு. 5 செருமுன். 6 பின்னை நின்ற, புகலாம் பின்னர், போன பின்னை.

75 மறங்கிளர் செருவில்[1] வென்று வாழ்ந்திலை மண்ணின் மேலா
இறங்கினை யின்று காறு மிளமையும் வறிதே யேக[2]
உறங்கினை யென்ப தல்லா லுற்றதோன் றுளதோ[3] வென்னீ[4]
அறங்கெட வுயிரை நீத்து மேற்கோள்வா னமைந்த தையா!

கொண்டுகூட்டு: ஐயா, (நீ) மறம் கிளர் செருவில் வென்று வாழ்ந்திலை, மண்ணின்மேலா(க) இறங்கினை, இன்றுகாறும் இளமையும் வறிதே ஏக உறங்கினை, என்பதல்லால், உற்றது ஒன்று உளதோ? நீ அறம் கெட உயிரைநீத்து மேற்கொள்வான் அமைந்தது என்?

பொருள்: ஐயா, (நீ ஆறுமாதம் உறங்கிக்கிடந்து கழிப்பதும் ஒருநாள் விழித்திருந்து களிப்பதுமாகவுள்ளாயாதலால், உன் ஆயுட்காலத்திலே முயற்சிக்குரிய காலம் மிகமிகக் குறைந்தது. ஆகவே, நீ வெகுசில போர்களே செய்தாய். பல) போர்களிலே செயமடைந்து (சிறந்தவாழ்வு) வாழ்ந்தாயில்லை. (ஆதலால்) பூமிமீதே (உன் போன்ற வீரர் உயர்வடையாநிற்க, நீ) தாழ்வடைந்தாய். இன்று வரையும் (பலபோகங்களை அநுபவித்தற்குரிய) இளமைப்பருவம் (பயன்படாது) அவமாகக் கழியும்படி உறங்கினையென்பதன்றி (-உறங்கும் சுகமாகிய பயனை உற்றா யென்பதன்றி நீ) உற்றது (ஆன நற்பயன்) ஒன்றேனுமுண்டோ? (இனி, பாவியான இராவணன்பக்கத்தில் நின்று) தருமங்கெடும்படி (போர்செய்து) உயிரை விட்டு அதன்பின்பு நீ அடைதற்குத்தகுதியானது யாது உளது? (மேலே கூறியவாறு நரகமே யுளது).

மறம் - வீரம். இளர் - விளங்குகின்ற. இறங்கினை - தாழ்வடைந்தாய். இப்படலத்தில் 'உறங்குகின்ற கும்பகன்ன' என்ற பாட்டில் 'தாழ்வடைகின்றது' என்ற பொருளில், 'இறங்குகின்றது' என்பது வந்தது காண்க. இன்றுகாறும் - இந்நாள்வரையும். வறிதே - பயனில்லாமல். மேல் - பின்பு. கொள்ளுதல் - பெறுதல். மேற்கொள்ளலை ஒருசொல்லாகக்கொண்டு ஏற்றுக் கொள்ளல் என்று பொருள்கூறலு மாம். அமைந்தது - தகுதியானது.

என்சொற்படி இராமனைச் சேர்வாயானால், அவன் அருளால் நாளேழுதலாக நெடுந்தூக்கம் நீங்கப்பெற்று, எல்லாப் போகங்களையும் இனிதநுபவிக்கும் செல்வமும் இதன்முன் உறங்கிப் பாழ்பட்ட நாள்களைப்பற்றிக் கழிவிரக்கங்கொள்ளாதவாறு சிரஞ்சீவிவாழ்க்கையும் (அடுத்தபாட்டில் கூறுமாறு) பெறுவாய் என்பது குறிக்க, 'இன்றுகாறும் இளமையும் வறிதேயேக உறங்கினை' என்றான்.

இளமை, அகப்பொருளாகிய காதல்புரிதற்குரிய காலமாதலால், இளமையும் என்பதில் உள்ள உம்மை, உயர்வுசிறப்பும்மையாயிருத்தலன்றி, அந்த இளமைக்கேயுரிய புறப்பொருளாகிய போர்புரிதல்குறித்த 'செருவில் வென்று வாழ்ந்திலை' என்பதைத் தழுவி அதன்பின்வந்ததனால், இறந்ததுதழீஇய எச்சவும்மையு மாம்.

'உறங்கினை' ஆதலால் இளமைக்குரிய போரும் காதலும் புரிந்தாயில்லை யென்பது பிண்டப்பொருள்.

பாடபேதம்: [1] உலகை. [2] வறிதேபோக, வறிதுயோக. [3] உளதே, உளவோ. [4] எண்ணி, என்ன, என்னை.

76 திருமறு மார்ப னல்க வனந்தலுந்[1] தீருந்[2] செல்வப்
பெருமையு மெய்தி வாழ்தி[3] யீறிலா நாளும் பெற்றுப்
ஒருமையே யரசு செய்வா யுரிமையு[4] முளதே[5] யொன்றும்
அருமையு[6] மிவற்றி[7] னில்லைக் காலமு மடுத்த தையா.

கொண்டுகூட்டு: ஐயா, திருமறு மார்பன் நல்க, அனந்தலும் தீர்ந்து, பெருஞ் செல்வமும் எய்தி ஈறிலாநாளும் பெற்றாய் (ஆகி) வாழ்தி; ஒருமையே அரசுசெய்வாய்; (அதற்கு) உரிமையும் உளது. இவற்றில் ஒன்றும் அருமை யில்லை; காலமும் அடுத்தது.

பொருள்: ஐயா, இராமன் கருணைசெய்ய, (அதனால்) (நீண்ட) உறக்கம் நீங்கிப் பெருஞ்செல்வம் அடைந்து (அதனோடு) முடிவில்லாத ஆயுளும் பெற்றாயாகி(ச்சிரஞ்சீவியாய்) வாழ்வாய். (பொது நீக்கித்) தனியாக (ஏகசக்ராதிபதியாய்) அரசுசெய்வாய். (அதற்கு — அவ்வாறு அரசாளுதற்கு — இராமன்கருணையேயன்றி, இறக்கக்கடவனாகவுள்ள ஏகசக்ராதிபதி இராவணனுக்கு நீ அடுத்த தம்பியாதலால்) உனக்கு உரிமையும் உள்ளது. (தூக்கநீக்கம், பெருஞ்செல்வம், தீர்க்காயுள், ஏகசக்ராதிபத்தியமாகிய) இந்தப் பேறுகளில் ஒன்றும் (இராமனை அடைந்தார் பெறுதற்கு) அருமையானது இல்லை. (இவைகளைப் பெறுதற்கேற்ற) காலமும் (அதிட்டவசமாகக்) கிட்டிவிட்டது. (இராமனை அடைவாயாக).

*திருமறு மார்பன் - அழகிய (ஸ்ரீவத்ஸமென்னும்) மறுவையுடைய மார்பினன். இது, திருமால் திருநாமங்களுள் ஒன்று. அனந்தல் - உறக்கம். தீர்ந்து - நீங்கி. வாழ்தி - வாழ்வாய். ஒருமையே - தனிமையாக.*

பாடபேதம்: [1] அனந்தரும். [2] தீர்ந்து. [3] வாழி. [4] உரிமையோ, உரிமையே. [5] உனதே. [6] அருமையே. [7] இதனின்.

77. தேவர்க்குந் தேவ னல்க விலங்கையிற் செல்வம் பெற்றால்[1]
யாவர்க்குஞ்[2] சிறியை யல்லை யாருனை நலியு மீட்டார்
மூவர்க்குந் தலைவ ரான[3] மூர்த்தியா ரறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து[4] நின்றார்[5] காகுத்த வேடங் காட்டி.

கொண்டுகூட்டு: மூவர்க்கும் தலைவரான மூர்த்தியார், அறத்தை முற்றும் காவற்குக் காகுத்தவேடங்காட்டிப் புகுந்துநின்றார். (அந்தத்) தேவர்க்கும் தேவன் நல்க, இலங்கைச்செல்வம் பெற்றால், யாவர்க்கும் சிறியை அல்லை! உன்னை நலியும் ஈட்டார் யார்?

பொருள்: (பிரம விட்டுணு ருத்திர ரென்னும்) மூவர்க்கும் முதல்வரான கடவுள், தருமத்தை (அறைகுறையாகவன்றி) முழுதுங் காக்கும்பொருட்டு, இராமனாகப் பிறந்திருக்கிறார். அந்தத் தேவதேவனே தந்தருள, இலங்கைச்செல்வத்தைப்பெற்றால்,

(எல்லாரினும் பெருமையுடையவனாவாய்,) எவர்க்கும் சிறியவனாயிராய். உன்னைத் துன்புறுத்தும் வலியுடையார் யாரும் இரார்.

தேவர்க்குத்தேவன், இராமனைக்குறித்தது. நல்க - கொடுக்க. இலங்கையிற் செல்வம் - இலங்கையை (உடைமையாக) உடைய செல்வம். நலிதல் - துன்புறுதல், துன்புறுத்தல் என்னும் இருபொருளுடையது; இங்கே துன்புறுத்தலென்னும் பொருள்தந்துநின்றது. ஈடு - வலிமை. புகுந்து - (பூமியில்) பிரவேசித்து. காகுத்தன் - ககுஸ்தவமிசத்தில் தோன்றிய இராமன்.

இராமனைப் பிறந்துள்ளாரென்பதைக் 'காகுத்தவேடங்காட்டிப் புகுந்துநின்றார்' என ஒருவகை இனிமைபுலப்படக்கூறிய நயம் நோக்கத் தக்கது.

பாடபேதம்: [1] பெற்றாய். [2] ஏவர்க்கும், எவற்கும். [3] முதலே யான, மூல மான. [4] பிறந்து. [5] நின்றான்.

78 உன்மக்க ளாகி யுள்ளா ருன்னொடு மொருங்கு தோன்றும்[1]
என்மக்க ளாகி யுள்ளா ரிக்குடிக் கிறுதி சூழ்ந்தான்
தன் மக்க ளோடு மையா[2] தலைமையாய்த்[3] திரிவ ரன்றே
புன்மக்கட் டருமம் பூணார் புலமக்கட் டருமம் பூண்பார்[4].

கொண்டுகூட்டு: 'ஐயா, (நீ இராமனைச்சேர்ந்தால்,) உன்மக்களாகியுள்ளார், உன்னோடும் ஒருங்குதோன்றும் என்மக்களாகியுள்ளார், இக்குடிக்கு இறுதி சூழ்ந்தான் (இராவணன்) தன்மக்களாகியுள்ளார் தலைமையாய்த்திரிவர்; புன்மக்கட்டருமம் பூணார்; புலமக்கட்டருமம் பூண்பார்; (அன்று ஏ, அசைகள்)

பொருள்: ஐயா, நீ இராமனைச்சேர்ந்தால், உன்மக்களும், உன்னுடன்பிறந்த(வனும் முன்னமே இராமனைச் சேர்ந்தவனுமான) என்மக்களும், இந்த அரக்கர்குலத்துக்கு முடிவை (மதிகெட்டுத்) தேடிய இராவணன்மக்களும் தலைமைநீங்காராய் வாழ்வார்: இராக்கதரது இழிந்த கருமத்தை அநுசரியார்; தேவர்களது உயர்ந்த கருமத்தைக் கைப்பற்றுவார்.

ஒருங்குதோன்றும் - உடன்பிறந்த. குடி - குலம். இறுதி - முடிவு. சூழ்ந்தான் - (மதிகெட்டுச் சீதையைக் கவர்ந்ததனால் அரக்கர்குலம் நாசமாகும்) யோசனையைச் செய்தவன்—இராவணன். புன்மக்கள் என்பதில் புன்மை, இழிவுகுறித்தது. புலம் - அறிவு. புலமக்கள் - அறிவுடைய மக்கள் - தேவர். புலவரென்றபெயர் அறிவுடையார்க்கும், தேவருக்கும் பொது.

இராக்கதரைப் புன்மக்களென்றதுபற்றி, புலவரை (தேவரை)ப் புலமக்களென்றான். இந்தப்பாட்டில், 'மக்கள்' அடுக்கு ஐந்துமுறை வந்தது கவனிக்கத்தக்கது. இராவணன் மனமார (வேண்டுமென்று) இராக்கதரைக் கெடுக்க நினைக்கவில்லையாயினும், அவன்செயல் அவர்கள்கேட்டுக்குக் காரணமாயிருந்ததைக்கருதி, 'இக்குடிக்கு இறுதிசூழ்ந்தான்' என்றான்.

இராவணன் கொல்லப்பட்டபின், தாம் (விபீடண கும்பகருணர்) இராமனை வேண்டி இறவாதெஞ்சிய அவன் மக்களை இராமானுக்கிரகம்பெறச்செய்யலாமென்பது கருதித் தங்கள் (விபீடண கும்பகருணருடைய) மக்களோடு இராவணன்மக்களைச் சேர்த்துக் கூறினான்.

என்னைப்போல நீயும் இராமனைச்சேர்ந்தால், அவன் இராவணனைக் கொன்றபின், நம் மக்களை ஆதரிப்பதுபோல், நம் வேண்டுகோளுக்கிணங்கி நம் சகோதரன்மக்களையும் ஆதரிப்பானாதலால், அவர்கள், தோற்ற அரசர்களுடைய குமாரரைப்போலத் தலைமையிழவாரென்பான், 'தலைமையாய்த் திரிவர்' என்றான்.

இராமனாதியரால் நல்லறிவுகொளுத்தப்பட்டு நல்வழிப்பட்டு இராவண கும்பகருண விபீடண குமாரர்கள், (அவர்களுடைய குடிகள், இவர்களெல்லாருடைய பின்சந்ததியார்களெல்லாரும்) இராட்சசவாழ்க்கைமுறையைக் கைவிட்டுத் தேவவாழ்க்கைமுறையைக் கைப்பற்றுவார்களென்பான், 'புன்மக்கட்டருமம் பூணார், புலமக்கட்டருமம் பூண்பார்' என்றான்.

இராமானுக்கிரகம்பெற்றால், அரக்கவகுப்பினர்க்கும் தேவ வகுப்பினருக்கும் உள்ள பகைமை நீங்கிவிடும். அதனால் தேவ வகுப்பைச்சேர்ந்தவரான முனிவர்முதலியோர் அநுகூலிகளாய் விடுவாரென்பது அடுத்த பாட்டில் கூறப்படுகின்றது காண்க.

பாடபேதம்: [1] உதயஞ்செய்த. [2] மக்களாகியுள்ளார். [3] தலையொடும். [4] புன்மக்கட் டருமம் பூணப் புலமக்கட் டருமம் பூண்டால், புன்மக்கட் டருமம் பூண்டார் புலமக்கட் டருமம் பூணர்.

79 முனிவரும் கருணை வைப்பர் மூன்றுல கத்துந்[1] தோன்றி
இனிவரும் பகையு[2] மில்லை யீறுண்டென் றிரங்கல் வேண்டா[3]
துனிவருஞ் செருநரான தேவரே துணைவ ராவர்
கனிவருங்[4] காலத் தைய பூக்கொய்யக் கருத லாமோ.

கொண்டுகூட்டு: ஐயா, முனிவரும் கருணைவைப்பர். இனி மூன்றுலகத்தும் தோன்றி வரும் பகை இல்லை. ஈறு உண்டென்று இரங்கவேண்டா(ம்). துனிவரும் செருநரான தேவரே துணைவராவர். கனிவரும் காலத்துப் பூக் கொய்யக் கருதலாமோ?

பொருள். ஐயா, (நீ இராமனைச் சேர்ந்தால், தேவர்களின் பகைவரான இராக்கதவகுப்பைச் சேர்ந்தவனென்று உன் திறத்தில், முன்பு கோபமுடையராயிருந்த) முனிவரும் அருளுடையராவர்; (இராவணனும் அவனைப் பின்பற்றுபவருமன்றி எல்லா உலகத்துள்ளாரும் இராமநேசராதலால்,) இனி (இராமனைச்சேர்ந்த உனக்கு) மூன்றுலகத்திலேயும் (எங்கேனும்) தோன்றிவரும் பகைவரும் இல்லை; (நான் இதன்முன் சொன்னபடி, இராமன் உனக்கு நீண்ட ஆயுள் அருள்வானாதலால்,) மரணம் உண்டாகுமோ வென்று (பயந்து) வருந்துதல் வேண்டாம்; வெறுக்கும் பகைவராயிருந்த தேவர்கள், (விரும்பும்) நண்பராவார்கள்; பழங்கள் தோன்றுங் காலத்தில் பூக்களைக் கொய்யக் கருதலாமோ?

முனிவர் - இருடிகள். ஈறு - முடிவு - மரணம். துனிவரும் - துனிக்கும் - வெறுக்கும். 'துனிவரும்' என்பதில் 'வரும்' துணைவினை. செருநர் - பகைவர். துணைவர் - நண்பர்.

'கனிதோன்றும்பருவத்துமலர்களைப் போற்றினால், அந்த மலர்களினின்றும் கனியுண்டாகும்: அவ்வாறன்றி, மலர்களையே கொய்துவிட்டாற் பிறகு எவ்வாறு கனிதோன்றும்? இராச்சியம் முதலியன பெற்று இனிதுவாழ்தற்கு உரியகாலத்தில், அவ்வினிய வாழ்ச்சிக்குக் காரணமாகும் உடலை இராமபிரானுக்குப் பகைவனாயிருந்து விட்டிடக்கருதுதல் தக்கதன்று என்றவாறு: ஈற்றடியிற் கூறிய உபமானப்பொருள் உபமேயத்தை விளக்கியது—பிறிது மொழிதலணி' வை. மு. கோ.

இப்பாட்டிற்போல, இப்படலம் 'உடலிடை' என்ற 73-ஆம் பாட்டில், உபமானப்பொருள்களைமட்டுங்கூறி உவமேயப்பொருள்களைக் கூறாமல் விட்டிருத்தல் குறித்துக்கொள்ளத்தக்கது.

பாடபேதம்: [1] மூவுலகத்தும். [2] துன்பம். [3] இரங்க வேண்டாம். [4] வரு.

80 வேதநா யகனே யுன்னைக்[1] கருணையால் வேண்டி விட்டான்
காதலா[2] லென்[3]மேல் வைத்த கருணையால் கரும[4] மீதே
ஆதலா லவனைக் காண வறத்தொடுந் திறம்பா[5] தைய
போதுவா யாக[6] வென்னப் பொன்னடி[7] யிரண்டும் பூண்டான்.

கொண்டுகூட்டு:—'ஐயா, வேதநாயகன் கருணையால் என்மேல் வைத்த கருணையால் காதலால் உன்னை (வர)வேண்டி (என்னை) விட்டான். கருமம் ஈதே ஆதலால், அறத்தொடு திறம்பாது அவனைக் காணப் போதுவாயாக' என்னப் பொன்அடி இரண்டும் பூண்டான்.

பொருள்: 'ஐயா, இராமபிரான், (பொதுவாக) எல்லா உயிர்களிடத்தும்வைத்த அருளினாலும் (விசேடமாக) என்மீது வைத்த அருளினாலும் உன்னை(த் தன்பால் அழைத்துவர)வேண்டி அன்புடனே (என்னை) அனுப்பினான். (நீ செய்யத்தக்க) காரியம் அவனைச்சேர்வதே. ஆதலால், நீ இராவணன்பக்கம் இருப்பது

தருமவிரோதம். நீ அவனை விட்டுவிடு: தருமத்தோடு மாறுபடாமைப்பொருட்டு இராமனைக் காணவருவாயாக' என்றுகூறி, (கும்பகருணனுடைய) பாதங்களிரண்டையும் (தன் தலைமேல்) சூடினான் (விபீடணன்).

வேதநாயகன், இராமனைக்குறித்தது. திறம்புதல்—மாறுபடுதல். போதுதல், போதல் வருதல் இரண்டுக்கும் பொது; இங்கே வருதற்பொருளில் வந்தது. பொன் அடி - அழகிய பாதங்கள்.

என் விருப்பப்படி, நீ இராமனை அடைந்தால், அவன் உன்னை ஏற்றுக் கொள்வானோ கொள்ளானோ என்ற சந்தேகத்துக் கிடமில்லையென்பான் 'வேதநாயகனே........வேண்டிவிட்டான்' என்றான்.

பாடபேதம்: [1] என்னைக். [2] ஈதலால். [3] உன், [4] தருமம். [5] திறம்பல். [6] போதுவா யாதி. [7] பொலன்கழல்.

## கும்பகருணன் கூறுதல்.

[கும்பகருணன், தன்பாதங்களைத் தலைமேலேந்தித் தன் கால்களைக் கைகளாற்பிடித்துக்கொண்டு பரிந்துவேண்டும் விபீடணனை வாரியெடுத்து மார்போடணைத்துக் கண்ணீர்சொரிந்துகொண்டு கூறுகின்றான்:— ]

81 நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்[1]
போர்க்கோலஞ் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்[2]
தார்க்கோல மேனி மைந்த[3] வென்றுயர் தவிர்த்தி யாகில்[4]
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதி னேகி[5].

கொண்டுகூட்டு: 'தார்க்கோல மேனி மைந்த நெடிதுநாள் வளர்த்து, பின்னை, போர்க்கோலஞ்செய்துவிட்டாற்கு உயிர்கொடாது, நீர்க்கோல வாழ்வை நச்சி, அங்கு (இராமனிடம்) போகேன்' என்றான்.

பொருள்: 'அப்பா, என்னை நெடுங்காலம் (அருமையாக) வளர்த்துப் பின்பு (இன்று) போர்க்கோலம் புனைந்து (தனக்காகப் போர்புரியும்படி போர்க்களத்துக்கு) அனுப்பின இராவணனுக்காக

என் உயிரைக்கொடாமல், நீரிலிட்ட கோலம்போல நிலையற்ற (செல்வ)வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு இராமனிடம் வரமாட்டேன். நீ என் மனத்துன்பத்தை நீக்குவாயானால், இராமனிடம் விரைவாக(த் திரும்பி)ப்போய்ச் சேர்வாயாக' என்று கூறினன் கும்பகருணன். அவன் மேலும் கூறுகின்றான்);—

நச்சி - விரும்பி. போகுதல், போதல் வருதல் இரண்டுக்கும் பொது. தார்க்கோலமேனிமைந்த-மாலை (அணிந்த) அழகிய உடலையுடைய மைந்தனே. தவிர்த்தி - நீக்குவாயாக. கார்க்கோல மேனியான் - மேகம்போன்ற அழகிய திருமேனியையுடையவன் - இராமன். கூடுதி - சேர்வாயாக. கடிதின் - விரைவாக. ஏகி - போய்.

விபீடணன், தமையன் கும்பகருணனை, இதற்கு முந்திய பாட்டுக்களில் மரியாதைபற்றி (தந்தையே யென்று பொருள்படும்) 'ஐயா' என விளித்தது போல, கும்பகருணன் தம்பியான விபீடணனை அன்புபற்றி (மகனேயென்று பொருள்படும்) 'மைந்த' என விளித்தான்.

'ஐயா' என்பது, மூத்தோர் அன்புபற்றி இளையோரையும் இளையோர் மரியாதைப்பற்றி மூத்தோரையும் விளிக்கும் பொதுவிளியாக இருப்பதும், 'மைந்த' என்பது மூத்தோர் இளையோரை விளிப்பதற்குமட்டும் வழங்கும் சிறப்புவிளியாயிருப்பதும் கவனித்தற்பாலன.

இதன்முன் கயிலைமலையைப் பேர்த்தெடுத்த பேருடலும் பெருவலியும் படைத்த இராவணன் நிற்கும் உயரம் கும்பகருணன் இருக்கும்பரமென இவனது உடற்பெருமையும், அப்படிப்பட்ட அபாரமான பெருங்காத்திரத்தை மிக எளிதாக விரைவாகக் கொண்டுசெல்வானென இவனது பெருமித உடல்வலியும், பேரூணும் வருணிக்கப்பெற்றிருக்கின்றன. ஆயின், இவன் மனநிலை இதுவரை விதந்துகூறப்படவில்லை. அதனைத் தெரிந்துகொள்வது, இப்பாட்டின் பொருளையும் இதுபோல இவன்கூற்றான பின்வரும் பாட்டுக்களின் பொருளையும் நன்றாகத் தெரிந்துகொள்ளுதற்குத் துணையாயிருப்பதனால், அம்மனநிலையை அறியமுயல்வோம்.

விபீடணனும் கும்பகருணனும் இராவணனுக்கு அன்புடையவர்கள். இராவணன் சீதையைக் கவர்ந்ததுபற்றி விபீடணன் போலவே கும்பகருணனும் மனவருத்தமடைந்து அவளை இராமனிடம் சேர்த்துவிடும்படி தமையனுக்கு நன்மதிகூறினன். கூறிய நன்மதி பயன்படாதுபோனபோது, விபீடணன், 'அற்றகுளத்தில் அறும் (- நீங்கும்) நீர்ப்பறவைபோல்' இராவணனைவிட்டு விலகிவிட்டான்: கும்பகருணனோ 'அக்குளத்திற் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் (நீர்ப்பூக்கள்) போல்', விலகாதவனாய் இராவணனுடனேயே வாழவும் சாகவும் மனம் ஒருப்பட்டிருக்கின்றான். கும்பகருணனது சகோதரவாஞ்சை, இராவணன் திறத்தில் இத்தன்மையதாயிருந்தது. அது, (அந்தச் சகோதரவாஞ்சை) விபீடணன்திறத்தில் எத்தன்மையதாயிருந்ததென்பதை ஆராய்வோம்.

இராவணன் தீ நெறியிற் சென்றதனால் கும்பகருணன் அன்பு குறையாததுபோல, அது, விபீடணன், எதிரியைச் சேர்ந்ததனாலும் குறையாதிருந்தது. எதிரெதிரான இரண்டு உடன்பிறந்தார் திறத்தில் குற்றங்களைப் பொருட்படுத்தாது குணங்களைப்பாராட்டும்படி செய்தது கும்பகருணனது சகோதரவாஞ்சையே. தன் செயல்களும் தம்பி விபீடணன் செயல்களும் நேர்மாறாயிருப்பதற்கு நியாயங்கூறுவானாய்க் கும்பகருணன் (இதற்கு அடுத்த பாட்டில்) இராமனையடைந்து வாழ்வடைதல் உனக்குத்தக்கது, இராவணனுடனிருந்து மரணமடைதல் எனக்குத் தக்கதென்றும், (இதனையடுத்த சிலபாட்டுக்களுக்குப் பின்வரும் 'செம்பிட்டு' என்ற பாட்டிலும், 'தாழ்க்கிற்பா' யென்ற பாட்டிலும், முறையே) 'நான் என் தமயனைக்கொன்ற இராமனைக் கும்பிட்டுவாழேன், நீ இராமனை அடைவாயாக' வென்றும் முரண்பட மொழிதற்குக் காரணம் கும்பகருணனுடைய அளவற்ற சகோதரவாற்சல்லியமே.

என்னை நெடுங்காலம் அருமையாக வளர்த்து இன்று போர்க்கோலம்செய்து அனுப்பிய இராவணன், நான் போர்புரிவேனென்று

நம்பியிருக்கும்போது, நான் இராமனிடம் சேர்தல், நன்றியின்மையும் நம்பிக்கைத் துரோகமுமாகுமாதலால், அவ்வாறு செய்யேனென்பான், 'நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்—போர்க்கோலஞ் செய்துவிட்டாற்கு உயிர்கொடா(து) அங்குப்போகேன்' என்றான். நாங்களெல்லாம் இறந்தபின் நீ ஒருவனாவது உயிர்வாழ்ந்து இராக்கதகுலத்தை ஈடேறச்செய்யவேண்டுமென்ற என்விருப்பம், நீ இராமனிடம் திரும்பிப்போய்ச்சேராவிட்டால், நிறைவேறாதென்ற துன்பமுடையேனாவேன்: நான் அவ்வாறாகாமல், நீ இராமனை விரைந்துபோய்ச்சேர்வாயாக என்பான், என்துயர் தவிர்த்தியாகில்-கார்க்கோல மேனியானைக் கூடுதி கடிதின் ஏகி' என்றான்.

பாடபேதம்: [1] நீங்கா. [2] போதேன், போந்தேன். [3] எந்தாய். [4] எனதுயிர் தருதி யாயின். [5] என்றான்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்.

## (கலைமகள்கழுத்தணி)

[௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### III. ஆகமவிரோதம்.

𑌯𑌦𑌾𑌗𑌮𑌕𑌲𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌕𑍋𑌶𑌵𑌿𑌦𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑌾𑌗𑌮𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌖𑍍𑌯𑌂 𑌦𑍋𑌷𑌮𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 𑌬𑍁𑌧𑌾𑌃 ॥ ௫௭ ॥

(1) அறநூல், (2) பொருணூல், (3) காமநூல் முதலியவற்றுடன் முரண்படுதலை 'ஆகமவிரோதம்' என்பர் அறிந்தோர்.

(1) அறநூன்மலைவு வருமாறு:—

𑌅𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌪𑌿 𑌤𑍇𑌨𑌾𑌸𑍌 𑌵𑍇𑌦𑌾𑌨𑌧𑌿𑌜𑌗𑍇 𑌗𑍁𑌰𑍋𑌃 ।
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌃 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑍋 𑌨 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

இவன் உபநயநம்செய்விக்கப்படாமலிருந்தபோதிலும் ஆசிரியனிடத்திருந்து வேதங்களைக் கற்றுமுடித்தான்; இயற்கையாகவே தூய்தான படிகக்கல்லானது தான் தூய்மையடைய வேறோர் செயற்கையை வேண்டாதன்றோ?

உபநயநம்செய்விக்கப்படாதவன் வேதநூல்களைக் கற்றல் அறநூல்வழக்கன்றாதலால், இது அறநூன்மலைவாயிற்று.

(2) பொருணூன்மலைவு வருமாறு:—

𑌕𑌾𑌮𑍋𑌪𑌭𑍋𑌗𑌸𑌾𑌫𑌲𑍍𑌯𑌫𑌲𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌮𑌹𑍀𑌜𑌯𑌃 ।
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑍇𑌣 𑌜𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌃 𑌕𑌿𑌂 𑌨𑌯𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ॥

அரசர்கள் பகைவர்களைவென்று நாடு கைக்கொள்ளும் வெற்றிக்குக் காமவின்பநுகர்தலே முழுதும் பயனுயுள்ளது. அரசர்கள் உள்ளத்திற் கொண்டிருக்கும் 'யானே வலியோன்' என்னும் செருக்காலே பகைவர்கள் வெல்லப்படுகிறார்கள்; அவர்களுக்கு நீதி நூல்களிற்கூறிய நால்வகையுபாயங்களும் வேண்டா.

அரசர் வெற்றிக்குக் காமநுகர்ச்சியே பெரும்பயன் என்றதும், செருக்காலே பகைவரை வெல்லலாமென்றதும், அவர்க்கு நால்வகையுபாயமும் வேண்டா என்றதும் பொருணூல்வழக்கின் வழிப்பட்டன அல்லவாதலால் இவை 'பொருணூன்மலைவு' எனப்படும்.

(3) காமநூன்மலைவு வருமாறு:—

தவாத்ரோஷ்டே பிம்போஷ்டி³ தஶநாங்கோ விராஜதே ।
பி⁴ந்நமூர்ச்ச²நயா ஸப்த ஸ்வரா ஶ்ருதா: ப⁴வந்தி ஹி ॥

ஆதொண்டைக்கனிபோன்ற உதடுள்ள பெண்ணே! உனது மேலுதட்டில் உன் தலைவனது பற்சுவடு விளங்குகின்றது. வெவ்வேறுமூர்ச்சையுள்ள இந்த இசையில் ஏழு ஸ்வரங்களும் நிகழ்கின்றன.

மேலுதட்டில் பற்சுவடுகொண்டல் காமநூல்வழக்கன்றாதலால் இது காமநூன்மலைவு. வெவ்வேறு மூர்ச்சையுள்ள இசையில் ஏழு ஸ்வரங்களும் இரா. அங்ஙனம் இருப்பதாகக்கூறியிருப்பது இசைநூலொடு மாறுபட்டதாய்க் காமநூன்மலைவின்பாற்பட்டதாயிற்று; இசையும் காமநுகர்ச்சிக் கங்கமாதலால்.

ஶப்³தா³நாம் பதா³நாம் வாக்யாநாம் வாக்யார்த²நாஞ்ச ய: கவி: ।
தோ³ஷாந் ஹேயதயா வேத்தி ஸ காவ்யம் கர்துமர்ஹதி ॥ ॥

இங்ஙனம் சொல்லப்பட்டசொற்குற்றம் வாக்கியக்குற்றம் வாக்கியப்பொருட்குற்றம் என்பவற்றை ஒழிக்கத்தக்கவை என்று யாவனொருவன் அறிகின்றானோ, அவனே காப்பியமியற்றத்தக்கவனாகின்றான்.

அலங்க்ருதமபி ஶ்ரவ்யம் யத்காவ்யம் குணவர்ஜிதம் ।
குணயோகஸ்தயோர்முக்யோ குணாலங்காரயோகயோ: ॥ ॥

அணிகள் பொருந்தியதாயிருப்பினும், கேட்டற்கினியதாயிருப்பினும் குணமில்லாத காப்பியம் காப்பியமாகாது. குணமுடைமை அணியுடைமை என்னும் இரண்டனுள் குணமுடைமையே சிறந்ததாம்.

த்ரிவிதாஶ்ச குணா: காவ்யே பவந்தி கவிஸம்மதா: ।
பாஹ்யாஶ்சாப்யந்தராஶ்சைவ யே ச வைஶேஷிகா இதி ॥ ॥

காப்பியங்களில் கவிகளால் மூவகைக்குணங்கள் அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. அவை 1. புறநிலைக்குணம், 2. அகநிலைக்குணம், 3. விசேடகுணம் ( - சிறப்பியற்குணம்) என்பனவாம்.

பாஹ்யா: ஶப்தகுணாஸ்தேஷு ஆந்தரா அர்த்தஸம்ஶ்ரயா: ।
வைஶேஷிகாஸ்து தே நூநம் தோஷத்வேऽபி ஹி யே குணா: ॥

(முற்கூறிய மூவகைக்குணங்களுள்) 1. புறநிலைக்குணமாவன சொற்குணங்களாம்; 2. அகநிலைக்குணமாவன பொருட்குணங்களாம்; 3. விசேடகுணமாவன குற்றமாயிருந்தும் (கூறுவோன் வல்லமையால்) குணமாக மாறித்தோன்றுமவையாம்.

## 1. சொற்குணம். (புறநிலைக்குணம்)

சதுர்விம்ஶதிராக்யாதாஸ்தேஷு ச ஶப்தஸம்ஶ்ரயா: ।
தே தாவதபிதீயந்தே நாமலக்ஷணயோகத: ॥ ௬௨ ॥

ஶ்லேஷ: ப்ரஸாத: ஸமதா மாதுர்யம் ஸுகுமாரதா ।
அர்த்தவ்யக்திஸ்ததா காந்திருதாரத்வமுதாத்ததா ॥ ௬௩ ॥

ஓஜஸ்யா ந்யௌஜி-த்யம் ப்ரேயா நய ஸுசப்தா ।
தஇஜ ஸமாயிः ஸௌக்ஷ்ம்யம் காம்பீர்யமய விஸ்தரः ॥ கூச ॥

ஸம்க்ஷேபः ஸம்மிதத்வம் பாவிகத்வம் கதிஸ்ததா ।
ரீதிருக்திஸ்ததா ப்ரௌடிः ..................

(புறநிலைக்குணங்களாகிய) சொற்குணங்கள் இருபத்துநான்கு வகைப்படும். அவை: 1. சிலேடம் (- செறிவு), 2. பிரஸாதம் - தெளிவு), 3. ஸமதை (- சமநிலை), 4. மாதுரியம் (- இன்பம்), 5. சுகுமாரதை (- ஒழுகிசை), 6. அருத்தவியத்தி (- உய்த்தலில் பொருண்மை), 7. காந்தி, 8. உதாரத்துவம், 9. உதாத்ததை (- பெருமை), 10. ஓஜஸ் (- வலி), 11. ஔர்ஜித்தியம், 12. பிரேயான் (பிரியஞ்செய்தல்), 13. சுசப்ததை (- இலக்கணச்சொல் லுடைமை), 14. சமாதி, 15. சௌக்ஷ்மியம் (-நுட்பம்), 16. காம்பீரியம் (- ஒளியுடைமை), 17. விஸ்தரம் (- விரிவுடைமை), 18. ஸம்க்ஷேபம் (- சுருங்க உரைத்தல்), 19. ஸம்மிதத்துவம் (- எல்லாரும் உடம்படுமாறு கூறல்), 20. பாவிகத்துவம், 21. கதி (- சொற்கள் ஒழுங்காக ஏறி இறங்குதல்), 22. ரீதி (- தொடங்கிய முறையையே அத்தொடர்முழுதும் வரும்படி செலுத்துதல்), 23. உக்தி (- நயம் பட்வுரைத்தல்), 24. பிரௌடி (- பலவகைச் சொற்களையும் முறை தவறுமற் சேர்த்தல்) என்பனவாம்.

......................ஸமேஷாம் லக்ஷ்யலக்ஷணே ॥ கூரு ॥

இனி இவற்றின் இலக்கணங்களும் இலக்கியங்களும் கூறப்படும்.

## 1. சிலேடம்.

குணः ஸுச்லிஷ்டபதா ச்லேஷ இத்யபிதீயதே ।

சொற்கள் பலவும் ஒன்றோடொன்று செறிந்து ஒரு சொற்போலத் தோன்றுதலைச் 'சிலேடம்' (- செறிவு) என்பர்.

உதாரணம்:—

𑌉𑌭𑍌 𑌯𑌦𑌿 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌾
𑌆𑌕𑌾𑌶𑌗𑌂𑌗𑌾𑌪𑌯𑌸𑌃 𑌪𑌤𑍇𑌤𑌾𑌮𑍍 ।
𑌤𑍇𑌨𑍋𑌪𑌮𑍀𑌯𑍇𑌤 𑌤𑌮𑌾𑌲𑌨𑍀𑌲𑌮𑍍
𑌆𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌲𑌤𑌮𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑌃 ॥

கங்கைநீர்ப்பெருக்கு இரண்டுபிரிவுகளாகப் பிரிந்து வானத்தினின்றும் விழுமாயின், அது, பச்சிலைமரம்போல் நீலநிறமுள்ளதும் இரண்டு முத்துமாலையணியப்பெற்றதுமான இவருடைய திருமார்பையொத்திருக்கும்.

இங்கே, வெவ்வேறுசொற்கள் ஒன்றோடொன்று செறிந்து ஒருசொற்போற்றோன்றுதலால் இது சிலேடம் என்னும் குணமுடையதாம்.

## 2. பிரஸாதம்.

𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌪𑌦𑌤𑍍𑌵𑌂 𑌯𑌤𑍍 𑌸 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍋 𑌨𑌿𑌗𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௬௬ ॥

பிரஸித்தமான பொருள்கொண்ட சொற்களையே தொடுத்துக் கூறின் அங்கு, பிரஸாதம் (= தெளிவு) என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

𑌗𑌾𑌹𑌨𑍍𑌤𑌾𑌂 𑌮𑌹𑌿𑌷𑌾 𑌨𑌿𑌪𑌾𑌨𑌸𑌲𑌿𑌲𑌂 𑌶𑍃𑌙𑍍𑌗𑍈𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌸𑍍𑌤𑌾𑌡𑌿𑌤𑌂
𑌛𑌾𑌯𑌾𑌬𑌦𑍍𑌧𑌕𑌦𑌮𑍍𑌬𑌕𑌂 𑌮𑍃𑌗𑌕𑍁𑌲𑌂 𑌰𑍋𑌮𑌨𑍍𑌥𑌮𑌭𑍍𑌯𑌸𑍍𑌯𑌤𑍁 ।
𑌵𑌿𑌶𑍍𑌰𑌬𑍍𑌧𑍈𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌵𑌰𑌾𑌹𑌤𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑍁𑌸𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑌤𑌿𑌃 𑌪𑌲𑍍𑌵𑌲𑍇
𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌮𑌂 𑌲𑌭𑌤𑌾𑌮𑌿𑌦𑌂𑌚 𑌶𑌿𑌥𑌿𑌲𑌜𑍍𑌯𑌾𑌬𑌨𑍍𑌧𑌮𑌸𑍍𑌮𑌦𑍍𑌧𑌨𑍁𑌃 ॥

தம் கொம்புகளால் அடிக்கடி தாக்கிக்கொண்டு கிடங்குகளினுள்ள நீரில் எருமைக்கடாக்கள் மூழ்குக; நிழலில் கூட்டமாகத்

திரண்ட மான்கள் (இரையை மென்று) அசைபோடுக; பன்றிக் கூட்டங்கள் அச்சமின்றிச் சிறுகிடங்குகளின்கரையிலுள்ள கோரைக் கிழங்குகளைத் தின்னுக; நம்முடைய வில்லும் நாண்கழற்றப் பெற்று ஒழிவடைந்திருப்பதாகுக.

இச்சுலோகம், தெளிவாகப் பொருளுணர்த்துஞ்சொற்களால் தொடுக்கப்பட்டிருத்தலால் பிரஸாதம் (- தெளிவு) என்னும் குண முடையதாம்.

### 3. சமதை.

யத்ர்ய ஸ்வரஸ்டோ நிஸ்வண வைநுவியிம் ஸ்ருதி ।
சுமெவெஷுஜெ்ண ஸண நம ஸமதா ஸா நிமஞ்ஜதெ ॥ ௬௭ ॥

வல்லினமாயும் மெல்லினமாயும் இடையினமாயும் உள்ள எழுத்துக்கள் ஒழுங்குபடச் சேர்ந்துவருமாறு சொற்களை அமைத்துக்கூறின் அது ஸமதை (- சமநிலை) என்னும் குணமுடையதெனப் பெறும்.

உதாரணம்.—

யத்ரு கொடிகார கொரகஸார்ஸாஜீ
வஸாஃ வஸுணி ஜடாவடிமெ ஸரஸு ।
தஸ்ஃ வநாத ஹிமெஸௌஸிஞாநிகஞ்ஜ
ஸாங்கார ஸம்வரவிராவி ஸரராவஹாஂஸஃ ॥

பிறைச்சந்திரனுடைய கிரணத்தொகையாகிய சுமையைச் சுமந்து சிவபிரான் செஞ்சடையில் சுழன்றலைந்ததும், பின்பு இமய மலைக்குகைகளிற் கலகலவென்று ஒலித்துக்கொண்டு புகுந்ததுமான கங்கைநீர் நும்மைப் புனிதப்படுத்துக.

இங்கே மூவினவெழுத்தும் தொடக்கம்முதல் விரவிவருமாறு சொற்கள் தொடுக்கப்பெற்றிருத்தலால் இது ஸமதை (- ஸமநிலை) என்னும் குணமுடையதாம்.

## 4. மாதுரியம்.

யா ப்ருதக்பததா வாக்யே தந்மாதுர்யமிதி ஸ்ம்ருதம்।

பெரும்பாலும் தொகைநிலைத்தொடர்கள் இன்றி, தொகா நிலைத்தொடர்களே பெரிதும் விரவியுள்ள வாக்கியத்தை 'மாதுரியம்' (- இன்பம்) என்னும் குணமுடையதென்பர்.

உதாரணம்:—

ஸ்திதா: க்ஷணம் பக்ஷ்மஸு தாடிதாதரா:
பயோதரோத்ஸேதநிபாதசூர்ணிதா:।
வலீஷு தஸ்யா: ஸ்கலிதா: ப்ரபேதிரே
சிரேண நாபிம் ப்ரதமோதபிந்தவ:॥

(தலையில்விழுந்த மழை) நீர்த்துளிகள் கண்ணிமை மயிர்களில் கணப்பொழுதுநின்றும், பின் உதடுகளில் விழுவதாலும் கொங்கைகளில் விழுவதாலும் சிறுதிவலைகளாய்ச் சிதறியும், பின் வயிற்றின் மடிப்புக்களில் நழுவிச்சென்றும் (இங்ஙனம்) தாமதித்து நாபியை அடைந்தன.

இங்கே தொகைமொழியின்றித் தொகாநிலைமொழிகளே வந்துள்ளமையால் இது மாதுரிய குணமுடையதாம்.

## 5. சுகுமாரதை.

அநிஷ்டுராக்ஷரப்ராயம் ஸௌகுமார்யமிதி ஸ்ம்ருதம்॥ ௬௮॥

வல்லோசையுள்ள எழுத்துக்களையொழித்துப் பெரும்பாலும் ஏனை எழுத்துக்களே வந்துள்ள வாக்கியம் "சுகுமாரதை" (வெறுத்திசையின்மை - ஒழுகிசை) என்னும் குணமுடையதாம்.

உதாரணம்:—

ஜ்யோத்ஸ்நாக்ருத்ய பஹுலாநி ஸௌவர்ணாந்யபாரதீதிபி:।
ஸம்பாவிந: ப்ரஸ்ருத்யதி காமே ஜீவிதோதரீதி॥

மேகங்கள் நிறைந்துதோன்றும் கார்காலத்தில் மயில்கள் தோகைகளை வட்டமாய் விரித்துக்கொண்டு இனிமையாக அகவு வனவாய் ஆடுகின்றன.

இங்கே, எல்லாவெழுத்துக்களும் மெல்லிய இசையுடையன வன்றிச் சிலவெழுத்துக்கள் வல்லிசையுள்ளவையாயிருப்பினும், பெரும்பாலும் வல்லோசையில்லாத ஏனையெழுத்துக்கள் வந்துள்ளமையால், செவிக்கின்னாத வெறுத்திசை சிறிதுமின்றியிருத்தலின் இச்சுலோகம் "சுகுமாரதை" (- ஒழுகிசை) என்னும் குணமுடையதாயிற்று.

## 6. அருத்தவியத்தி.

𑌯𑌤𑍍𑌰 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌂 ।

ஆக்கச்சொல் காரணச்சொல் முதலிய சொற்களெல்லாம் நிறைந்து ஒருவகையினும் எஞ்சுதலின்றியுள்ள வாக்கியம் "அருத்தவியத்தி" (- உய்த்தலில்பொருண்மை) என்னும் குணமுடையதென்பர்.

உதாரணம்:—

𑌵𑌾𑌗𑌰𑍍𑌥𑌾𑌵𑌿𑌵 𑌸𑌂𑌪𑍃𑌕𑍍𑌤𑍌 𑌵𑌾𑌗𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌯𑍇 ।
𑌜𑌗𑌤𑌃 𑌪𑌿𑌤𑌰𑍌 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍌 ॥

சொல்லும் பொருளும்போல் விட்டுநீங்காதவர்களும், மூவுலகிற்கும் தாய்தந்தையருமாகிய பார்வதீபரமேசுவரரை நான் சிறந்த சொற்பொருள்களை அறிந்துகோடற்பொருட்டு வணங்குகின்றேன்.

இச்சுலோகம் ஒரு சொல்லும் எஞ்சிநிற்றலின்றி எல்லாச்சொற்களும் நிறைந்துநிற்றலால் "அருத்தவியத்தி" (- உய்த்தலில்பொருண்மை) என்னும் குணமுடையதாம்.

## 7. காந்தி.

யது³ஜ்ஜ்வலத்வம் ப³ந்த⁴ஸ்ய காவ்யே ஸா காந்திருச்யதே ॥ சுசு ॥

காப்பியமியற்றுதலில் ஒளிதோன்றுமாயின் அது காந்தி எனப்படும்.

உதாரணம்:—

நிராநந்த³: கௌந்தே³ மது⁴னி விது⁴ரோ பா³லப³குலே
ந ஸாலே ஸாலம்போ³ லவமபி லவங்கே³ ந ரமதே ।
ப்ரியங்கௌ³ நாஸங்க³ம் ரசயதி ந சூதே விசரதி
ஸ்மரம்ல்லக்ஷ்மீலீலாகமலமது⁴பாநம் மது⁴கர: ॥

ஸ்ரீதேவியின் திருக்கையிலிருக்கிற லீலாகமலத்திலுள்ள தேனைக்குடித்தலையே நினைத்துக்கொண்டிருக்கிற வண்டானது, குந்தமரத்தின் தேனில் களிப்படையவில்லை; இளமைவாய்ந்த மகிழமரத்திலிருந்து விலகியது; சாலமரத்திற் பற்றற்றது; லவங்கமரத்தில் சிறிதும் விளையாடுவதில்லை; வாஸனைபொருந்திய 'பிரியங்கு' மரத்தில் நட்பை ஒழிந்தது; மாமரத்தை அணுகுவதேயில்லை.

இச்சுலோகம் சொற்றொடர் சிறந்து ஒளிர்தலால் "காந்தி" என்னும் குணமுடையதாம்.

## 8. உதாரத்துவம். (ஔதார்யம்)

விகடாக்ஷரப³ந்த⁴த்வமாருரௌதா³ர்யமுச்யதே ।

(சுலோகம்) கடினமான எழுத்துக்கள் பயில இயற்றப்பெற்று, (நடை துள்ளலுடையதாயுமிருந்தால்) ஔதாரியம் என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

ஶ்ரோஹத்³வநீரோஹம் ப்ரவிஶதி ஶ்வஹம் நமேமஃஸ்வயமேத
ப³ம்ஹ்வாரோபிவிபேஷ்டதேக்ஷிதிதலேகாஞ்ஜாதரோஷியதே ।
கஞ்சுகஶ்ரீதி கோடரஸ்ய விஶஸத்வாரம்பதே வீராய:
கிம் தத்³யந்ந கரோதி ஸாரதபஸம் யாத: க்ருஶாநாவநே ॥

கானகநடுவில் காற்றின்வசம் அகப்பட்ட தீயானது எதைத் தான் செய்யாது?—மரத்தில் ஏறுகிறது; பள்ளங்களில் பிரவேசிக்கிறது; மலைகளோடு பகைக்கிறது; ஆகாயத்தைச் சுவைக்கிறது; பூதலத்தில் இயங்குகிறது; புதர்களில் மறைகிறது; மரப்பொந்துகளின் நடுவே சுழன்று விளையாடுகிறது; கொடிகளைப் பற்றுகிறது.

இது, கடினமாயுள்ள எழுத்துக்களால் அமைந்திருத்தலாலும், ஓசை துள்ளலுடையதாயிருத்தலாலும் 'ஔதாரியம்' என்னும் குணமுடையதாம்.

## 9. உதாத்ததை.

[illegible] ॥

சிறந்த அடைமொழிகளைத் தந்து எடுத்துக்கொண்ட பொருளை விசேடித்துக்கூறினால் அது 'உதாத்ததை' என்னும் குணமுடையதாம்.

**உதாரணம்:—**

[illegible] ।
[illegible] ॥

மாற்றரசனொருவன் எதிர்பாராதநிலையிற் (படையெடுத்து) வந்துவிட்டானென்று கேட்டுத் தம் ஊர்களைவிட்டு ஓடுகின்ற பகையரசர்களின் அந்தப்புரமடந்தையர்களால், கழுத்தைத்திருப்பிக் கொண்டு, நீர்ததும்பி நனைக்கப்பட்ட இமைகளுடன்கூடிய கண்கள், வெண்ணிறமான தம் வீட்டிலும் தளிரடர்ந்த தம் பூந்தோட்டத்திலும் புதிதாயலர்ந்த தாமரைப்பூக்கள் நிறைந்த தம் வாவியிலும் பசும்புல் அடர்ந்த தம் செய்குன்றிலும் செலுத்தப்பட்டன.

இங்கே அழகிய அடைமொழிகள் புணர்க்கப்பட்டிருத்தலால் இது 'உதாத்ததை' (- பெருமை) என்னும் குணமுடையதாம்.

## 10. ஓஜஸ்.

ஓஜஸ்ஸமாஸபூயஸ்த்வம்..................

தொகைநிலைத்தொடர்களே பெரும்பாலும் வந்துள்ள வாக்கியம் ஓஜஸ் (- வலி) என்னும் குணமுடையதாம்.

உதாரணம்:—

ஜயதி புஜகரஜ்ஜுக்ரந்திநிஷ்பீடிதேந்து
ஸ்ரவதம்ருதநிவ்ருத்தப்ரௌடஹாவை: கபோலை: ।
விரசிதநதிபிர்மூர்த்நி பத்தாஞ்ஜலீபி:
பரிணதபஹுகல்பப்ரஹ்மணாம் ப்ரஹ்மகோஷ: ॥

அரவுகளாகிய கயிறுகளால் இறுக்கிப்பிழியப்படுகிற திங்களிலிருந்து பெருகுகின்ற அமுதத்தால் நனைக்கப்படும் கன்னங்களையுடைய சிவபிரானைக் குறித்து, சென்னியிற் கரங்குவித்துத்தொழுகின்றவரும் கல்பந்தொறும் தோன்றுபவருமான பிரமர்களால் செய்யப்பட்ட மறைமுழக்கம் (வேதகோஷம்) மிகவும் உயர்ந்ததாயிராநின்றது.

இங்கே, பெரும்பாலும் தொகைநிலைத்தொடர்களே வந்துள்ளமையால் இது 'ஓஜஸ்' என்னும் குணமுடையதாம்.

## 11. ஔர்ஜித்தியம்.

....................ஔர்ஜித்யம் காடபந்ததா ।

உரப்பிக்கூறும் எழுத்துக்கள் இடையிடை நெருங்கிவருமாறு புணர்த்தால் அவ்வாக்கியம் "ஔர்ஜித்தியம்" என்னும் குணமுடையதாம்.

உதாரணம்:—

அவிச்சிந்நோத்திதாகுஞ்சிதஶிகாக்ரோ தூமோ தாவாக்நே:
கிஞ்சித்விவர்திதவிததஃ ஶ்யாமஃ ஸ்நிக்தோ விஹாயஸி ।
ய: ப்ரோத்தீய ஸ்தூலகண்டைர் விஷக்தைர் நீலோ தாவாக்நே:
ஶைலம் ஸர்வம் ஸ்ருஜதி ஘ந ஘நாந் ஸம்ப்ரமந் ந: ஸம்ஹ்ர்ஷ்டோ ॥

சற்று வளைந்து பரவியதாயும் இடையிடையே தொடர்பின்றி அற்றற்றெழுகுவதாயும் எருமையின் பிடரிபோற் கருத்ததாயும் உள்ள காட்டுத்தீயின் புகை, வானில் எங்கும் தடையின்றிச் சென்று, அங்குமிங்கும் தனித்தனி துண்டுபட்டு உலாவுகின்ற மேகங்களை உண்டாக்குகின்றது (- மேகங்கள்போல் விளங்குகின்றது).

இங்கே உரப்பிக்கூறும் எழுத்துக்கள் இடையிடையே நெருங்கி வருமாறு சொற்கள் புணர்க்கப்பெற்றிருத்தலால் "ஔர்ஜித்தியம்" என்னும் குணம் தோன்றுவதாயிற்று.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,
மதுரை.

# மானக்கஞ்சாறநாயனூர் திருப்பதி.

வை. சுந்தரேசவாண்டையார், ஆசிரியர், திருவையாறு.

'மலைமலிந்த தோள்வள்ளல்' எனச் சுந்தரமூர்த்திநாயனாரால் சிறப்பிக்கப்பெற்ற மானக்கஞ்சாறர்,

> "மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர்தாம் விரும்பியது
> நூலாறு நன்குணர்வார் தாம்பாடும் நோன்மையது
> கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறொழுகும்
> காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர்"

என்று சேக்கிழாரால் புகழ்ந்தோதப்பெற்ற திருப்பதியில், வேளாண்குலத்தில் அரசர்சேனாபதியாம் குடிவிளங்கத்தோன்றியவர். அவர் மெய்ப்பொருளை அறிந்துணர்ந்தாராதலினால், பணிவுடைமையே அணியுடம்பாகக்கொண்டு, சிவபெருமான் திருவடிக்கு ஆளாகும் பேறுபெற்று, தம்பெருமான் கழல்சார்ந்த தொண்டர்க்கே ஏவல்செயும் தொழில்பூண்டு, தம் உடைமை யாவும் "அடியாராம் ஈறில் பெருந்திருவுடையார் உடையார்" என்று துணிந்து, அவர்கள் கூறுமுன் குறிப்பறிந்து கொடுத்துவந்தார்.

இந்நாயனார், தம் தவப்புதல்வியாய்த் தோன்றி, ஏயர்கோன் கலிக்காமநாயனாரது வாழ்க்கைத்துணைவியாம் பேறுபெற்ற பெண்கொடியின் திருமணநாளிலே, சிவபெருமான் பைரவமுனிவராய் எழுந்தருளித் தம்மைவணங்கிய மணமகளது "மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தலை" நோக்கி, இது நமது பஞ்சவடிக்காமென்று கூறவே, உடனே அவளது கூந்தலை அடியோடு அறுத்து நீட்டிய பெருமையுடையவர். இப்பெரியார் தோன்றியருளத் தவம்புரிந்த கஞ்சாறூர் யாது என ஆராய்வோம்.

கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை சோழமண்டலத்தை ஈடும் எடுப்புமின்றி ஆண்ட முதலாம் இராசராசமன்னன், தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்குச் சோழமண்டலத்திலுள்ள பல

ஊர்களினின்று இடப்பட்ட மெய்காப்பார்களுக்கு நிவந்தம் அளித்துள்ள செய்தியை ஒருகல்வெட்டுப் புலப்படுத்துகின்றது. அவ்வாறு மெய்காப்பார்களை இடப்பெற்ற ஊர்களில் இராசேந்திரசிங்க வளநாட்டு இந்தளூர்நாட்டுக் கஞ்சாறநகரும் ஒன்றாகும் என்று அக்*கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. (S. I. I. Vol. II Part III. Inscription No. 70.)

இதனால் இராசேந்திரசிங்க வளநாட்டிலுள்ள இந்தளூர்நாட்டில் கஞ்சாறூர் உள்ளது என்று பெறப்படுகின்றது.

இராசேந்திரசிங்கவளநாடு என்பது காவிரிக்கும் வெள்ளாற்றிற்கும் இடையிலுள்ள ஒரு பெருநிலப்பரப்பாகும். இது இருபத்திரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் இந்தளூர்நாடு என்பது ஒன்றாகும். இந்தளூர் மாயூரத்திற்கு வடபாலுள்ளது. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம்செய்யப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இக்காலம் இதைத் திருவழுந்தூர் என்று மக்கள் வழங்கிவருகின்றனர்.

திருநீடூர், கஞ்சாறநகரம், மாற்பிடுகு சதுர்ப்பேதிமங்கலம், திருநின்றியூர்: என்பன இந்தளூர்நாட்டில் அடங்கியுள்ள ஊர்களென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இவற்றால் தேவாரம் பெற்ற தலங்களாகிய திருநீடூர், திருநின்றியூர்: இவைகளுக்கு அண்மையில் கஞ்சாறூரும் இருத்தல்வேண்டும்: என்று துணியக்கிடக்கின்றது.

---

* இது, ஒரு நீண்ட கல்வெட்டு; ஆகையால் இவ்வாராய்ச்சிக்குப் பயன்படக்கூடிய அளவு அக்கல்வெட்டை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதுவரை உடையார் இராஜராஜீசுவரமுடையார்க்குச் சோழமண்டலத்து இட்ட திருமெய்காப்பார்களுக்குப் பெயரால் ஆட்டைவட்டன் நூற்றுக்கலநெல்லுத் திருமெய்காப்பார்களை இட்ட அவ்வவர் ஊர்களிலாரே அளக்கக்கடவார்களாகவும். இந்நெல் அவ்வவர் ஊர்களிலார்க்கு சந்திராதித்தவல் ஆட்டாண்டுதோறும் தன்கடமைக்குச் செலவுபெறும்படி பெறவும்.

'இந்நாட்டுக் கஞ்சாறநகர் ஊரார் இடக்கடவ திருமெய்க்காப்பு ஒன்றும்'. (Vol. II Part III Page 332)

மேற்குறித்த திருநீடூருக்கு வடக்கே சுமார் இரண்டு கல் தொலைவில் ஆனந்தத் தாண்டவபுரம் (ஆனைதாண்டாபுரம்) என்று ஓர் ஊர் இருக்கின்றது. அவ்வூரில் மிகப்பழைமைவாய்ந்த சிவாலயம் ஒன்று இன்றும் நின்று நிலவுகின்றது. அதில் கல்வெட்டுக்கள் இருந்து உதிர்ந்துபோன குறிப்புக்களும் உள்ளன. அவ்வாலயத்தில் மானக்கஞ்சாறருடைய பழமையும் தனிமையும் வாய்ந்த படிமம் ஒன்று இருக்கின்றது. எனவே இதுவே மானக்கஞ்சாற நாயனார் திருப்பதியாகும். இதற்குள்ள பழம்பெயராகிய கஞ்சாறூர் என்பது எப்பொழுது யாரால் மாற்றப்பட்டது என்று திட்டமாகக் கூறுதற்கு இதுபொழுது தக்க ஆதாரம் கிடைத்திலது. திருநாவுக்கரசரது க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் எட்டாம் பாடலில் வைத்து, இக்கஞ்சாறூர் பாடப்பெற்றிருத்தலால் இது ஒரு வைப்புத்தலமுமாகும்.

மேற்காட்டிப்போந்தவற்றால் தஞ்சைசில்லா மாயூரந்தாலூகாவிலுள்ள ஆனந்தத்தாண்டவபுரமே மானக்கஞ்சாறர்பதியாகிய கஞ்சாறூர் ஆகும் என்பது பெறப்படும்.

பிரமாதி௵ மார்கழி௴ 14௳ (29—12—'39)

கோயம்புத்தூர் ஸ்ரீமான். திவான்பகதூர்

C. V. வேங்கடரமணையங்காரவர்கள்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு விஜயஞ்செய்தபொழுது

செந்தமிழுதவிப்பத்திராசிரியர்

T. K. இராமாநுஜையங்கார் இயற்றிப்படித்த

# வரவேற்புப்பத்திரம்.

திருமால் சரண மலரிணையே
சிரமேற் புனைவோன்! வருக! உயர்
தெய்வ மறையோர் குலத்துமணித்
தீபம்! வருக! கோவைநகர்ப்

பெருமான் வருக! தருமமிகப்
பேணும் சீர்வேங் கடரமணப்
பெரியோன் வருக! நின்வரவு
பெரிதும் சிறக்க! நின்வரவால்

தருமா திகளும் மறையிரண்டும்
தழைத்து வாழ்க! செந்தமிழ்க்கும்
தமிழ்நா வலர்க்கும் தாயகமாச்
சாரு மதுரைத் தமிழ்ச்சங்கம்

ஒருமா நிலத்து முத்தமிழும்
ஓங்க வளர்த்து வாழிய! நீ
ஊழி யூழி இந்நாள்போல்
உயர்ந்தோர் புகழ வாழியவே

ஸ்ரீ:

# இராமசெயம்.*

(இராமாயணத் திருப்புகழ்.)

[௫௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பூம னென்றொ ருத்தன் மிக்க
காம னென்[1]றொ ருத்த னுற்ற
[2]பூரு வந்த னிற்ப டைக்க [3]சிறுவோர்கள்
பூத லந்[4]த னிற்ப டைப்பர்
மாதர் சிங்கி யிற்பி ணிப்பர்
போக வெம்பி றப்பு விட்டு விடுமோதான்
நீம கிழ்ந்து பெற்ற புத்ரர்
வாரு மென்ற ழைத்தென் மட்டு
நீதி யன்றெ னப்பி றித்து னடியார்தம்
நேரில் பந்தி யிற்பு குந்தி
வான கங்கை யுற்ப வித்த
நீள்பெ ரும்ப தத்தில் வைப்ப தொரு[5]நாளோ
ஆம ருந்து நிற்கும் வெற்பை
வானெ ழுந்து நித்தன் மற்று
மாதி யந்த லத்தி ருந்தி யுடன்மீளா
ஆய தங்கு ணர்ச்சி யற்று
மோக ரம்பை [6]சுத்த நிர்த்த
ஆடல் கண்டி ருக்கு முக்ர [7]அனுரேசன்

* ஏட்டுப்பிரதிகளிலுள்ளபடி வெளியிடப்படுகிறது.

[பி-ம்.] 1 றொ ருத்தன் மற்ற. அ. 2 பூம னந்த. அ. 3 சிறியோர்கள். அ. 4 தனைப்ப. அ. 5 நாளோ. அ. 6 சுற்றி நிற்க. அ. 7 அசுரேசன். அ.

வாம முந்து டிக்க வெட்டு
யானை யும்ப தைக்க மிக்க
மாதி ரம்பி ளக்க வெற்றி யிமையோர்பூ
மாரி சிந்த நற்கை கொட்டி
யாடி நின்று கொக்க ரித்த
வான ரங்க ளைப்ப டைத்த பெருமாளே. (61)

தூயத் தார்பெற வோவநி
யாயத் தார்பெற வோகொலை
[1]சாதிப் பார்பெற வோநெடு நிலமீதே
தாழத் தானுற வோபொருள்
சேமிப் பார்களு லோபிகள்
தானத் தூடுமி டார்குண மதுகாணார்
கோயிற் கேயுத வார்விடு
பாழைக் கூறியெ னுவ்வது
கோதற் றேதமிழ் பாடிய பரகாலன்
கோடிப் பாகிய மாமதில்
[2]வாசற் கோபுர நீதுயில்
கோலக் கோயிலுள் யாவையும் [3]அறியாரோ
மாயத் தாலொரு சீதையை
மேலைக் கோபுர [4]வாசலின்
[5]மாளத் தூதன்மு னேதலை யற[6]மோதி
வாழிக் கோசல [7]மீதிலு
[8]ளாரைப் போயடு வேனென
வானுற் றேவட பாலெழ அனுமானும்

---

[பி-ம்.] [1] சாதித்தார். அ. [2] வாயிற். அ. [3] அறியாரே. அ. [4] வாயிலின். அ. [5] மாணத். அ. [6] வீசி. அ. [7] மீதுள. அ. [8] பேரைப். அ.

நேயத் தாலமு தே[1]சொல
வோடித் தாளொரு வீட்டணன்
நீலச் சோலையின் மாதையு மகன்வேள்வி
நேர்தப் பாமையும் வீறொடு
[2]காணுற் றோளி யாய்வரு
நீதிக் கேண்மையி னன்மகிழ் பெருமாளே. (62)

வரங்க ளுதவு முனது
பதங்கள் [3]பெருமை புகலில்
மரங்க ளுருகு மலைகண் [4]முதலாக
மயங்கி யுருகு மிருபு
[5]விணங்கி யுருகு மிருகம்
வணங்கி யுருகு [6]மரவு புழுவாருக்
தரங்க ளுருகு முடிவில்
இரும்பு முருகு மினிய
[7]தலங்கண் முழுது முருகும் இவைபோலே
சமைந்த வெகுளி விரகொ
டிடும்பு [8]படிறு கவலை
தணிந்தென் மனமு முருகி நெகிழாதோ
உரங்கொள் [9]கவசம் வரிவில்
வழங்கி விடையு மருளி
யுகந்த பிறகு நெடிது கடிதேகி
உறைந்த வடமு மொடிய
நிகும்ப லையு[10]னை யனலு
முயர்ந்த மகமு மழிய நிருதேசர்

---

[பி-ம்.] [1] செல. ச. [2] காணுற் றேதெளி யாவரும். அ. [3] முதன்மை. அ. [4] முதல்யாவு. அ. [5] வினங்க ளுருகு. அ. [6] மரவும். அ. [7] தலங்க ளுருகு முழுதும். அ. [8] நெடிய. அ. [9] பொருவில் கவசம். அ. [10] மவ் வனலு. அ.

அசைந்து மடிய வருணன்
விரிஞ்சன்[1] விடையர் படையு
மழிந்து வெருவி யுதவி — யறவோடி
யலைந்து நிருதர்[2] குமர
னிலங்கை புகுத முடுகு
மலங்க விளவல் பரவு — பெருமானே. (63)

குங்கும மேனியகின்
மென்பனி நீர்புழுகு
கொண்டு குலாவிவளர் — கிரிபோலுங்
கொங்கையி லேகொடிய
செங்கையி லேகரிய
கொண்டையி லேகடிய — கழியூடே
மங்கைநல் லார்களிடு
சிங்கியி லேமதன[3]
வந்தியி லேயடிமை — யழியாமல்
வண்டுளை வார்சரண
பங்கய மேகருதி
மங்கல மாயதவி — பெறுவேனோ
அங்கொரு தானைதயடி
பண்புடனேபரவி
யம்புய மாதைவிடு — நரனேவும்
அம்பினை நாணறிவ
னென்றிடு போதுபொர
அஞ்சினை யோசிறுவ — எனவேதிக்[4]
கெங்கணு[5] மேயிரிய
வந்தொரு தேரின்மிசை
யிந்திர னோர்பகைஞன் — அமராடற்[6]
கிங்கிதகாலமென[7]
வந்தெதி ரேமுடுகும்
எம்பெரு மானுடைய — பெருமானே. (64)

---

[பி-ம்.] [1] விரிஞ்சர். அ. [2] நிருத குமரன். அ. [3] வதன. அ.
[4] எனவேகி. அ. [5] பெங்கணு மேபெரிய. அ. [6] அமராட. அ. [7] விங்கித. அ.

வாணிலா நித்தில ப்ரபையொழுங் கியகிரண
காமமே கட்டறப் புளகருங் குமமுலைகள்
மார்புமூழ் கிக்குளித் திடநகம் புதையவது பிறைபோலே

வாகுமூ லத்தினிற் பொலியவிற் கிதமிட்டு
காடைபோ டெட்டெனக்[1] குமுறிமுன் குமுகுமென
மாலையோ திச்[2]சொருக்கவிழ வெங்கலகவிழி குழைதாவக்

கோணிலா வட்டமெத் தையிலிரண் டுடலுமொ
னேகமா கித்திளைத் தமுதுகிந் தியகுழுத
கோவையூ றற்செருக் கினிலமூந் தியவவச [3]மனுபோகக்

கோலகா லத்[4]திறற் சதிர்மடந் தையருறவி
ஞானமே சிக்கியிப் படியழிந் [5]திடுமெனிருள்
கோதில்ஞா னப்ரபைச் சுடரெழுந் துதயமுற விடியாதோ

காமொணு வித்தகப் பரிவிடுந் தனிவலவ
னோடுதேர் கட்டழித் தடல்பொருந் தியகிருதர்
கால்கடோன் மெய்க்கழுத் தொடுசிரந் துணியமுதிர் கணையேவிக்

காவடா வித்தனிப் பகழியென் றெதிர்[6]முடுக
ராவணீ விட்டொளித் தகலும்வஞ் சனையைவிடு
காதகா மற்றனக் கிறுதி[7]யின் றெனவிலொடு காம்வீழப்

பாணமே விட்டறுத் துடல்பிளந் தயிரைவரு
காலதூ தர்க்களித் தனுமனென் பவனுடைய
பாரமேருப்பொருப்பனைய திண்புயமிசையி லுடன்மீளப்

பாகசா தப்பெயர்க் குரிசில்கண் டுளமகிழ
மேகநா தப்பெயர்க் கொடியவன் கடியதலை
பாதகா ணிக்கையிட் டிளையவன் பரவமகிழ் பெருமாளே.

---

[பி-ம்.] [1] குமுகுகுங் குமுகுமென. அ. [2] செருக். அ. [3] வனுபோகக். அ. [4] திறத் தினின்மடந்தையருறவி: அ. [5] திடுமிருள். ச. [6] முடுகி: அ. [7] யென் றிளவலொரு. அ.

என்[1]போ காவிரு வினைவழி
முன்போய் வீழ்வதும் வருவது
மென்றே வேதனை படுமென துயிர்போவ
இன்றோ நாழிகை யொருகலை
சென்றோ நாளையு மல[2]வினி
யென்றோ நானறி குவதிலை யதுவாறற்
பொன்போன் மேனியொ டெதிர்வா
வின்றே கூறினன் விழுமுடல்
புண்போ லேபடும் வசமறும் அயர்வாகும்
பொன்று நீடிய [3]புனல்வகை
நின்றே போதறும் வழு[4]வுறு
புன்சீ ராகிய மொழிகளும் [5]உதவாதோ
வன்போ ராடிய வொருதனி
நம்பீ போயினை யெதருறை
மைந்தா வோவென துயிர்[6]நிகர் மகனேயோ
வந்தே தனினி யிமையவ
ருய்ந்தா ரோமொழி தருகிலை
[7]வண்பே றேயென மயன்மக ளுடனேவந்
தன்போ டேமக னுடலது
கண்டே நீடிய களமிசை
யந்தார் மார்பொடு தழுவின [8]னகர்மேவி
அங்கே ராவண னழுதெழ
இங்கே வீடணர் தமையும
தன்றோ வீரிய மெனவருள் பெருமானே. (௬௬)

---

[பி-ம்.] [1] போதாவிரு. அ. [2] இனி. அ. [3] புலன்வகை. அ. [4] வுறும். அ. [5] உதவாதே. அ. [6] பொரு. அ. [7] வன். அ. [8] னகமேவி. ச.

பூமிய வித்தவள் தேவி
பூமியு மற்றொரு தேவி
போகந லத்தினின் மூழ்க முறையாமே
போதனு னக்கொரு சூனு
ஆயவ னுக்குவெ ணீறு
பூசிய நக்கர் குமாரர் அவர்தாமுன்

தோமறு மைத்துன ராவர்
நீமுறை கட்டிய வாறு
சூழ்புவி யிற்சொலொ ணாது பெரியோர்கள்
சோர்வுப டைத்தன ராகில்
யாவர்ந கைப்பவர் யாவர்
தூடணை செப்பவல் லார்கள் உரையாடாய்

மாமக னுக்கழு போது
மூலபெ லப்படை மேவ
[1]மானிட ரைப்பொரு வீர்க ளெனவேவி
வானர ரைப்பொரு போது
வீடண னொக்[2]துரை யாட
மார்புகு றித்தொரு வேலை விடலோடு

மாமுனி லக்குவ னோடி
மார்புகொ டுத்துடன் வீழ
வாடல ரக்கனு மேக மலைதாரா
வானம ருத்துவர் போல
ஓடியெ ழுப்பனு மானை
யாளுடை வித்தக தேவர் பெருமாளே. (67)

---

[பி-ம்.] [1] மானுட. அ. [2] தம ராட. அ.

கோங்கைகள் வீற மந்தர மந்தரம்
வஞ்சக பார்வை மென்கயல் மென்கயல்
கொந்தள பார மஞ்சுகள் மஞ்சுகள் உரையாடிக்

கொஞ்சிய தோக ரும்புக ரும்[1]பிவர்
செங்கனி வாய்ம ருந்துமரு ருந்துயிர்
கொண்டபு ருரு வெஞ்சிலை வெஞ்சிலை மலராயுஞ்

செங்கைகள் காணு முண்டக முண்டக
மங்கிடை யோவெ றும்பொய்வெ றும்பொய்செ
மூங்[2]தொடை யோவ ரம்பைய ரம்பையிம் மடவார்வேள்

சிங்கிக ளேய றிந்தத றிந்தது
பின்செல வேணு மென்றும யங்குற
சிந்தையின் மோக ணந்தெளி யும்படி யருள்வாயே

வெங்கர மாயி ரஞ்சிர பந்திக
ளஞ்சிரு நூற கொண்ட[3]பெ ரும்படை
பின்படை வீசு பின்பிடி [4]தண்டெடு கணையாலே

வெம்புலி சாடு குந்தமெ றிந்திடு
தின்றிடு வேழ முந்தவ ளைந்துகொள்
விண்பட மூடு றங்கென வன்கள முறுபோரின்

இங்குமி ராம ணிங்கும வன்சரம்
அங்குமி ராம னங்கும வன்சரம்
எங்குமி ராம னெங்கும வன்சரம் எனவேசென்

றெண்படு சாப கிண்கிணி பண்பட
அங்கொரு யாம நின்றுகி ணிங்கிணி
னென்றிட மோதி வென்றுதி ரும்பிய பெருமாளே. ()

---

[பி-ம்.] [1] பவர். அ. [2] துடை. ச. [3] வெளம்படை. அ. [4] தண்டொடு. அ.

ஆல மர்ந்து புனல்க ரந்து
மானி டங்கொ ளெழில்வி ரும்பி
யானை கொன்று [1]பணியின் முன்பு கடமாடி

யா[2]னு கந்து பரசு கொண்டு
சீர்[3]மி குந்து வரைபொ ருந்தி
யான பெண்க ளிருவர் தங்கள் பதியாகி

மாலை வென்ற வொளிய மைந்து
வேளை மைந்த னெனம கிழ்ந்து
மானை மூந்த வுயிர்[4]க வர்ந்த முனிவோடே

[5]மான கஞ்சன் முடிபி டுங்கி
ஈடு கம்ப மிசைவி ளங்கி
வாழ்சி லம்பு குனிய நின்று சிவனைய்

மூல வஞ்சர் படைய டங்க
வான டைந்த பிறகு வந்து
மோது கின்ற [6]முருகன் முன்பு கடவாவேன்

மூரி வஞ்சர் வலியை யின்று
பாரி தென்று [7]பொரமு னங்க
மூடு கின்ற கவச மம்பு சிலைவீழக்

காலொ ரம்பு கரமொ ரம்பு
தோளொ ரம்பு சிரமொ ரம்பு
காதொ ரம்பு விழியொ ரம்பு கடிதேவிக்

கால னஞ்ச முடுகி வந்த
மோத ரன்ற னுயிரை யுண்டு
காணு மண்டர் பரவ நின்ற பெருமாளே. (69)

---

[பி-ம்.] [1] பகினி முன்பு. அ. [2] னு வந்து. அ. [3] மி குந்த. அ. [4] கவர்ந்து. அ. [5] மானி. அ. [6] மருகன். அ. [7] பொருமு. அ.

[1]ஆவத்தே யானது
கூடத்தான் வாவெனில்
ஆகெட்டே னேயென அயலேகி

ஆருக்கா ரேதுணை
தீயிற்சா கேனெனு
மானைக்கோ டாமுலை மடவாரை

மேவுற்றே வீடது
[2]சோடிக்தே வாழ்வதின்
மேதக்கோர் சேர்வுற வதுபோதும்

வீழ்விப்பா யோவெனை
வாழ்விப்பா யோவினி
மேலைக்கே தோக்குடை யறியேனே

[3]கோவத்தோ டேயொரு
தேரைத்தான் மேல்கொடு
கோடித்தே ராவணன் வருபோதிற்

கோலத்தே [4]வாதிபர்
காணுற்றே தேர்கொடு
கூடிக்காண் மாதவி யெனலோடுங்

தேவர்க்கே யாகிய
மானத்தேர் [5]மானிடர்
[6]தேர்வுற்றே யேறவும் எளிதாமோ

திசைப்பா ரீரென
வோதித்தான் மேல்விடு
தேரிற்போ யேறிய பெருமாளே. (70)

---

[பி-ம்.] [1] ஆபத்தே. ச. [2] சோவித்தே. அ. [3] கோபத்தோ. ச.
[4] வாதியர். ச. [5] மானுடர். அ. [6] தேறுற்றே. அ.

சீறு கோபகு ணத்தவர் வஞ்சகர்
[1]மூடர் பாதகர் செற்ற[2]மி குந்தவர்
தேடி யேபொருள் வைப்பவர் கிஞ்சிலும் அருளாதார்
[3]சீரி லாதவ சட்டவர் கண்டகர்
ஈன மானபி றப்பினர் மங்கையர்
சேர்வை யூடும யக்குறு நெஞ்சினர் பழிநாணுர்

சோறி டாதவர் கற்றறி வுஞ்சொலி
யோடி யேநர கிற்புகு கின்றவர்
சூது காரரு லுத்தர்கு மந்திர மகலாதார்
சோர ராமிவ ரைத்தினமிந்திர
தாரு வேயென நிற்கைத விர்ந்தொரு
சோதி யானவு னைப்பர வுந்தவம் அடைவேனே

ஏறு மாகரு டற்கது முன்பொறி
வீர மாருதி வெற்றிநெ டும்புய
மீறி லாதுத ழைத்திட வென்றெதிர் மலர்தூவி
ராம ராவண யுத்தமு மின்றிது
காண வேணுமெ னக்கக னஞ்செறி
யீச னுன்முகன் மற்றுள வண்டர்கள் களிகூர

வீறு தேரின்வி ரற்பட வங்கது
பூமி [4]யூடுசு ரித்தலு மிந்தவி
ஞைத மாரொடெ னக்ருபை வந்தபின் [5]வரலோடும்
[6]வீணி லேபல சொற்கள்வி ளம்பிய
பாகன் மாதலி வெட்கவ ணங்கவி
மான மேறிவெ ளிப்பட நின்றருள் பெருமாளே. (71)

---

[பி-ம்.] [1] வேடர். அ. [2] மிகுத்தவர். அ. [3] சீரிலாதவர் கெட்டவர். அ. [4] யோடு. ஈ. [5] எழலோடும். அ. [6] மீது லாவிய. அ.

மருவிய கலைக ளொருநடு விறக்க
விளைஞர்க ளுருகு மனமதி யிறக்க
வரிசிலை மதனன் மணிமுடி யிறக்க இளநீரும்
[1]வகைபயின் முகையு மழகுக ளிறக்க
[2]முறுகிய துறவு நினைவற விறக்க
மடல்பர வுகையின் வளர்பனை யிறக்க அதிபாரக்
கிரியென வளரு மிளமுலை யசைத்து
வருமட மகளிர் கலவியின் மிகுத்த
[3]க்ருபையொடு திரியு மறிவிலி யபத்தன் முழுமூடன்
கெடுதொழி லசட னவகுண சரித்ர
விபரித மறவு னடியவர் நெருக்கு
கெழுதகு குழுவின் மருவுறு தவத்தை யருள்வாயே
அருகிய தரும மதுகலை யெடுக்க
மனுநெறி யுலகு தனிலடி யெடுக்க
அயன்முக [4]மினிது மறையொலி யெடுக்க மறையோர்பால்
அவிபடு கனலு [5]நிறையொலி யெடுக்க
வுரிமையி னமர ரவியுண வெடுக்க
அழகிய சரித மகிலமு மெடுக்க வினையாளன்
இருபது புயமு மலைகைக ளெடுக்க
ஒருபது சிரமு நரியின மெடுக்க
[6]எழில்விழி மணிகள் கழுகுக ளெடுக்க எதிராரென்
றிமையவர் பதிதன் மலர்முக மெடுக்க
மயன்மக ளலறி யழுகுர லெடுக்க
இடதுகை பொலிய [7]வரிசிலை யெடுத்த பெருமாளே. ( )

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

---

[பி-ம்.] [1] மரைபயின். அ. [2] முதிரிய. அ. [3] க்ரியையொடு. அ. [4] மினிய. அ. [5] நெறியொலி. அ. [6] எரிவிழி. அ. [7] வொருசிலை. அ.